


of the Death of Karl Marx
Koichiro Suzuki
NOV. 1958

# கார்ல் மார்க்ஸ்

**அ**வன் பாவம், வாய் பேச இயலாதவன். ஆனால், உழைப்பாளி. பார்க்கவே பரிதாபமாக இருந்தான். அவன் பர்ஸில் சொற்பமாகவே இருந்தது பணம். பேருந்தில் ஏறிய அவன் அருகில் வந்து நின்றான் டிப்டாப் ஆசாமி ஒருவன். கண்களில் கூலிங் கிளாஸ், கழுத்தில் மைனர் செயின் என பந்தாவான தோற்றம். ஆனால், அவன் செய்த காரியம்?



பேருந்தின் நெரிசல் வசதியாக இருக்க அந்த வாய் பேச இயலாத ஏழையின் பேன்ட் பாக்கெட்டுக்குள் இருந்த பர்ஸை அபேஸ் பண்ணிக்கொண்டு இறங்கி ஓடினான் டிப்டாப் ஆசாமி. சுதாரித்த ஏழை, தன் பர்ஸை மீட்கத் துரத்தி, டிப்டாப்பின் சட்டையைக் கொத்தாகப் பிடிக்க, இருவருக்கும் சண்டை. கூட்டம் கூடிவிட்டது.

சட்டென டிப்டாப், தனது பர்ஸை அந்த ஏழை திருடிவிட்டதாக உண்மையைத் தலைகீழாகப் புரட்டிப் போட, மொத்தக் கூட்டமும் அந்தப் பரிதாபத்துக்குரிய வாய் பேச இயலாதவனைச் சாத்துகிறது. பாவம், அவனால் உண்மையைச் சொல்லவும் வழியில்லை. சொன்னாலும், அது எடுபடாது. ஏனென்றால், அவனது தோற்றம் அப்படி. பொது ஜனங்களைப் பொறுத்தவரை, ஏழைதான் திருடுவான்.

இந்தத் தருணத்தில் பேருந்திலிருந்து இறங்கிய மூன்றாவது நபர் ஒருவர் அங்கே வருகிறார். அவருக்கு உண்மை தெரியும்.

இப்போது சொல்லுங்கள்... அந்த மூன்றாவது மனிதர் என்ன செய்ய வேண்டும்?

யார் குற்றவாளி என்ற உண்மையை ஊருக்கு உலகுக்குச் சொல்லி, அந்த ஏழையைக் காப்பாற்றி, டிப்டாப் திருடனை அடையாளம் காட்ட வேண்டியது, அவரது கடமை அல்லவா?

அதை அவர் செய்தார். அவர்தான்... கார்ல் மார்க்ஸ். அந்தச் சமயத்தில் அவர் செய்த புரட்சி, கம்யூனிசம்; அதற்காக அவர் மேற்கொண்ட பாதைக்குப் பெயர்தான்... மார்க்ஸியம்!

பேருந்தை, கால வெள்ளமாகவும்... டிப்டாப் ஆசாமியை முதலாளி எனப்படும் பூர்ஷ்வாக்களாகவும், அதிகாரமற்ற காரணத்தால் வாய் பேச இயலாதவனாகிப் போன அந்த ஏழையை, தொழி லாளியாகவும், பண்ணை அடிமை யாகவும் எனச் சற்றே மாற்றி, மேலே சொன்ன சம்பவத்தைப் பார்த்தால், உலக வரலாற்றில்

மார்க்ஸின் பங்களிப்பு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர முடியும்!

யார், கார்ல் மார்க்ஸ்?

காலம் எப்படி கிறிஸ்துவுக்கு முன் - கிறிஸ்துவுக்குப் பின் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதோ,

அப்படியே மனித குல வரலாற்றையும் மார்க்ஸுக்கு முன் - மார்க்ஸுக்குப் பின் என இரண்டாகப் பிரிக்கலாம். அந்தளவு தன் சிந்தனைகளாலும், கோட்பாடுகளாலும் இந்த உலகத்தைச் சீரமைத்த சிற்பியாக இருந்தவர், கார்ல் மார்க்ஸ்!

“மனித குல உயர்வுக்கும் சமூக மேன்மைக்கும் அர்ப்பணித்துக்கொள்ளும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களின் சுமை நம்மை ஒருபோதும் அழுத்தாது.ஏனென்றால், அது எல்லோருக்காகவும் செய்கிற தியாகம்!” என அவரே சொன்னாலும், மனிதகுலமே ஒட்டுமொத்தமாக மண்டியிட்டு, மன்னிப்புக் கோர வேண்டிய அளவுக்குத் துன்பங்களையும் துயரங்களையும் கொண்டது மார்க்ஸின் வாழ்க்கை. அடுத்த நூற்றாண்டின் இதயங்களையும் கண்ணீரால் நனைக்கும்படியான அவரது வாழ்க்கை, 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப கால ஐரோப்பாவிலிருந்து துவங்குகிறது.

ஜெர்மனியின் மேற்கு எல்லைக்கும் பிரான்ஸின் கிழக்கு எல்லைக்கும் இடையே, முடிவற்ற நீல தாவணி போலப் பாயும் அழகிய ரைன் நதிக் கரை. இளம் பச்சை நிறக் கடலாக விரிந்து கிடக்கும் வயல்வெளிகளுக்கு நடுவே, மாளிகைகளும் கோபுரங் களுங்களுமாகக் காணப்படும் பழைமையான ‘ட்ரையர்’ நகரம். தேவாலய மணியோசைகள் கேட்டுக்கொண்டே இருக்கும் அந்த நகரத்தில், தடுக்கி விழுந்தால் இரண்டு பேர் காலில் விழ வேண்டும். ஒன்று, பாதிரியார், இன்னொருவர் புரட்சியாளர். அந்த அளவுக்குப் பாதிரிகளும் போராளிகளும் புழங்கிய மண்.



ஐரோப்பா முழுவதுமே பிரெஞ்சுப் புரட்சி காரணமாக, புதிய புதிய தத்துவங்களும் கருத்துருவாக்கங்களும் பூத்துச் சொரிந்த காலம். கூடவே அரசின் அடக்குமுறையும் கடுமையாக இருந்தது. ஆகவே, பிரான்ஸ், ஜெர்மனி என இரு தேசங்களிலுமே அரசுக்கு எதிராகக் கொடிபிடித்தவர்கள் எல்லாம் நாடு கடத்தப்பட்டு, இந்த ட்ரையர் நகருக்குள் கொட்டப்பட்டனர். இவர்களால் ட்ரையர் நகரம் பரபரப்பின் மையமாக இருந்தது. மாலை நேரம் வந்துவிட்டாலே, மது விடுதிகளில் கருத்து மோதல்களைக் கேட்க கூட்டம் கூட ஆரம்பித்துவிடும். இரண்டு அரசாங்கங்களுமே, கருத்தியல்வாதி களைக் கண்டு பயப்பட, அதனாலேயே மக்களிடம் அவர்கள் கதாநாயகர்களாக!

‘இனி இந்த உலகத்தை தத்துவங்கள்தான் ஆளும்!’ என எல்லோரும் உறுதியாக நம்பினர்.

வானில் அதிசயங்கள் ஏதும் நிகழ்ந்திராத இரவொன்றில், 1818-ம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள், ட்ரையர் நகரத்தின் பிராக்கன்ஸ் வீதியின் 664 இலக்கமிட்ட வீட்டில், ஹர்ஷல் மார்க்ஸ் மற்றும் ஹென்ரிட்டா எனும் யூதத் தம்பதியினருக்குப் பிறந்த ஆண் குழந்தைக்குப் பெயர்... கார்ல் மார்க்ஸ்!

ஹெர்ஷல் மார்க்ஸ், தன் இதயத்தில் வால்டேர், ரூசோ என யுகப் புரட்சியாளர்களின் கருத்துக்களை உள்வாங்கிய பிரெஞ்சுக்காரர். தாய் ஹென்ரிட்டாவோ, அடுப்படிக் குள்ளேயே தன் வாழ்நாளை அடக்கிவிட்ட யூத குடும்பப் பெண்மணி. ஜெர்மன் மொழி பேச வராத காரணத்தால், ட்ரையர் நகரத்தின் மேல் அவளுக்கு காரணமற்ற பயமும் கவ்வியிருந்தது.

மொத்தம் எட்டு குழந்தைகளைக் கொண்ட அவர்களது இல்லற வாழ்வில் கடைசியில் மிஞ்சியது என்னவோ, ஒரு ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும்தான். ஒரே ஆண் என்பதாலோ என்னவோ கார்ல் எப்பவுமே எல்லோருக்கும் செல்லம். அக்கா சோபியா, தங்கைகள் எமிலி, லூயிஸ் எல்லோரும் தன்னைக் கண்டு பயப்படும்படியாக நடந்துகொள்வதில் அவனுக்கு ரொம்பப் பிரியம். வக்கீல் தொழிலில் வருமானம் தட்டுப்பட்டால், ஹெர்ஷல் மார்க்ஸ் தன் குழந்தைகளுக்கு கேக்குகள் வாங்கி வருவார். சிறுவனான கார்ல், தன் சகோதரிகளின் பங்கையும் தனதாக்கிக்கொள்ள சில தந்திரங்களை அடிக்கடி பயன்படுத்தி அதில் வெற்றியும் பெறுவான். தன் அழுக்குக் கைகளால் சகோதரி களின் கேக்கை அசுத்தமாக்குவது அதில் ஒன்று. அம்மாவின் கண்டிப் பான வளர்ப்பின் காரணமாக, சுத்தத்துக்குப் பேர்போன பெண் பிள்ளைகளைச் சுலபமாக ஏமாற்றினான் கார்ல்.



பேர்தான் வக்கீலே தவிர, ஹெர்ஷலுக்குப் பெரிதாக வழக்குகளே வரவில்லை. அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாட வேண்டிய பிழைப்பு. வழக்குகள் வராமல் இருப்பதற்குக் காரணம், தான் ஒரு யூதனாக இருப்பதுதான் என்பது புரியவே அவருக்கு வெகு காலமாயிற்று!

மதப் பற்று, அக்காலகட்டத்தில் சற்று கூடுதலாகவே இருந்தது. கத்தோலிக்கக் கிறிஸ்து வர்களிடத்தில் அது வெறியாகவே மாறியிருந்தது. யூதர்களை அவர்கள் விரோதிகள் போல் பார்த்தனர். யூதர்களும் லேசுப்பட்டவர்கள் இல்லை. தாங்கள்தான் மிகப் பழைமையானவர்கள் என்பதும், கிறிஸ்துவே தங்களது மதத்தில் பிறந்தவர்தான் என்பதும்தான் அவர்களது கர்வத்துக்குக் கார ணம். இதனாலேயே யூதர்களின் மேல் கிறிஸ்துவர்கள் மனதில் கடும் வெறுப்பு. பொருளாதாரத்தில் தங்களைவிட ஏழைகளாக இருந் தாலும் இந்த யூதர்களிடம் தலைக்கனம் மட்டும் அதிகமாக இருக்கிறதே, இதனை எப்படி அடக்குவது எனக் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் உள்ளுக்குள் புகைந்துகொண்டு இருந்தனர். ட்ரையர் நகரத்தில் எண்ணிக்கையில் குறைவாக இருந்த யூதர்களுக்கு, தங்களால் வருமானம் எதுவும் வந்துவிடாதபடி எச்சரிக்கை



யுடன் பார்த்துக்கொண்டனர். இதுதான் யூதரான ஹெர்ஷல் மார்க்ஸ் வக்கீல் தொழிலில் வழக்குகள் கிடைக்காமல், ஈ ஓட்டக் காரணம்!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஹெர்ஷல், குடும்பக் கஷ்டங்களுக்காக வேறு வழி யில்லாமல் அதிர்ச்சியூட்டும் ஒரு முடிவுக்கு வந்தார். மனைவிக்கு, கணவனின் அந்த முடிவில் உடன்பாடு இல்லை என்றாலும், குழந்தைகளின் எதிர்காலத்துக்காக, கிறிஸ்துவ மதத் துக்கு மாறும் முடிவுக்குச் சம்மதித்தார். ஒரு பாதிரியின் துணையோடு ப்ராட்டஸ்டன்ட்டுக்கு மாறியது குடும்பம். ஹெர்ஷல் மார்க்ஸ் என்ற பெயர் ஹென்ரிச் மார்க்ஸ் ஆனது. மதமும் பெயரும் மாறிய வேகத்தில், அவர்களது வாழ்க்கையின் நிறமும் மாறத் துவங்கியது. வழக்குகளும் வந்து குவிய ஆரம் பித்தன. காலங்கள் மாறின. அவர்களது வீட்டின் வண்ணமும், வாழ்வின் உயரமும் மாறியது.



இப்போது ஹென்ரிச் மார்க்ஸ், பிரபலமான வக்கீல். ஆனாலும் அவருக்கு, தான் மதம் மாறிய வேதனை, உள்ளூர இம்சித்தது. தாயார் ஹென்ரிட்டாவும் மனதளவில் ஒரு யூதப் பெண்ணாகவே இருந்தார். இதனால் ட்ரையர் நகரத்தின் மீதான அவளது பயம் இன்னும் இன்னும் அதிகமானது. மகன் கார்ல் மார்க்ஸை எப்படியாவது நன்கு படிக்கவைத்து, நல்ல குடும்பத் தலைவனாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் அதிகமாக இருந்தது. ஆனால் அப்பாவுக்கோ, கார்லை ஊர் மெச்சும் ஒரு விஞ்ஞானியாக்கி, அறிவிலும் அந்தஸ்திலும் அனைத்து கத்தோலிக்கர்களையும்விட மிக உயர்ந்த மனித னாக்க வேண்டும் என்ற விருப்பம்.

கார்ல் மார்க்ஸ் இருவரது எண்ணங்களிலும் மண்ணை அள்ளிப் போடப்போகிறார் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது!

## வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே!

**சி**றுவன் மார்க்ஸ் ஒரு புரியாத புதிர். உருகி ஓடும் எரிமலைக் குழம்பு போல ஒரு தகிப்பு அவரது சொல்லிலும் செயலிலும் வெளிப்பட, அவரது தாயான ஹென்ரிட்டாவுக்குதான் பெரும் தலைவலி!

தினம் தினம் யாராவது, அழுதுகொண்டு இருக்கும் தங்களது மகனைக் கையில் பிடித்தபடி, மார்க்ஸ் பற்றி புகார் சொல்ல வாசலில் வந்து நிற்பர்.

அவ்வளவுதான், ஹென்ரிட்டாவுக்குத் தாங்காது! சில சமயங்களில் பொறுமை தாங்காதவளாக, குச்சியால் மார்க்ஸை விளாசித் தள்ளிவிடுவாள். அதுபோன்ற

சமயங்களில் மார்க்ஸின் தந்தையான ஹென்ரிச் ஓடி வந்து மகன் மேல் அடி விழாமல் தடுப்பார்.

அம்மாவிடம் அடி வாங்கிய மகனைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டு நீள நடை பயில்வார் ஹென்ரிச். அழுது தேம்பும் மகனைச் சாந்தப்படுத்த, தீரமிக்க கிரேக்க வீரர்களின் கதைகள் சொல்வார். வீர தீர சாகசங்கள் மார்க்ஸை மகிழ்விக்க, பாசம்கொண்டவனாக அப்பாவின்

கழுத்தைக் கட்டிக்கொள்வான். என்றாலும் முரட்டுத்தனம் மிகுந்த மகனது சுபாவம், அவனது எதிர்காலம் குறித்து ஹென்ரிச்சுக்குக் கவலை தருவதாகவே இருந்தது.

மார்க்ஸை ஜிம்னாஸியத்தில் சேர்த்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும் என அறிவுறுத்தினர் அக்கம்பக்கத்து மக்கள். ஜிம்னாஸியம் என்றால், ஜெர்மனியில் பள்ளிக்கூடம் என்று அர்த்தம். ட்ரையர் நகர ஜிம்னாஸியம் ஒன்றில் மார்க்ஸ் அவரது 12-ம் வயதில் சேர்க்கப்பட் டார். அதுவரை வீட்டுச் சூழலில் படித்து வந்த மார்க்ஸுக்கு, பள்ளி புதிய காற்றைத் திறந்துவிட்டது. தினந்தோறும் பள்ளிக்குப் புறப் படும்போது, தனது அப்பாவின் புகைப்படத்தை மறக்காமல் பாக்கெட்டில் எடுத்து வைத்துக்கொள்வார் மார்க்ஸ். இந்தப் பழக்கம் அவரது இறுதி நாள் வரை தொடர்ந் தது. சடலமாக அவர் கிடத்தப்பட்ட சமயத்திலும் அந்தப் புகைப்படம் அவரது பாக் கெட்டில் இருந் தது. அப்பாவுக்கும் மகனுக்கும் அப்படியொரு பாசப் பிணைப்பு! இதனால்தான், மார்க்ஸ் தன் எண்ணங்களுக்கு மாறாக விலகிச் சென்றபோதும் ஹென்ரிச்சால் வேதனைப்பட மட்டும் முடிந்ததே தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

பள்ளியில் மார்க்ஸ், கண்ணைப் பறிக்கும் ஒரு காட்டுச் செடி போலத் திரிந்தார். ஏதோ ஒரு கொந்தளிப்பும் ஆவேசமும் அவரைச் சதா அலைக்கழித்தன. அவரிடமிருந்து வெளிப்பட்ட சுடு சொற்கள் தாங்காமல் சக மாணவர்கள் விலகி ஓடினர். தன்னியல்பாக வெளிப்பட்ட கவிதாவேசம்தான் அவரது அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஆரம்பம். அது ஓர் அளப் பரிய ஆற்றல்கொண்ட கொந்தளிக்கும் காட்டாறு. அந்தக் காட்டாறுதான் பின்னாட்களில் பெரும் சிந்தனை வெள்ளமாகப் பெருக்கெடுத்து மனிதகுலத்தின் பிரம்மாண்ட தடைகளைஎல்லாம் அடித்து நொறுக்கித் தூள்தூளாக்கியது. ஆனால், அந்தச் சிறு வயதில் யாருமே அந்த ஆரம்ப நெருப்பின் ரகசியத்தை அறியவில்லை.



படிப்பிலும் மார்க்ஸ் பெரிதாகச் சோபிக்கவில்லை. ஏதோ ஒன்றைத் தேடி அவரது மனம் தீவிரமாக அலைந்துகொண்டு இருந்த சந்தர்ப் பத்தில் அவரைச் சட்டெென ஈர்த்தது ஒரு துண்டறிக்கை. அது அப்போது ஜெர்மனியை ஆண்ட மன்னருக்கு எதிரான துண்டறிக்கை. அதை வாசிக்கும்படி ரகசியமாக அவருக்குத் தந்தவர், அவரது கணித ஆசிரியர் ஜோஹன்.

ட்ரையர் நகரத்துப் புரட்சியாளர்களுக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. மாணவர்களிடத்தில் பல துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து, அவர்களது இளம் நெஞ்சில் கருத்து விதைகளை ஊன்றி, புரட்சி வேளாண்மை செய்துவந்தார் ஜோஹன். மார்க்ஸுக்கு அந்தத் துண்டுப் பிரசுரங்கள் திக்குத் தெரியாத கொந்தளிப்புகளுக்குத் திசை காட்டியாக அமைந்தன. மார்க்ஸைப் போல எண்ணற்ற மாணவர்களுக்கு அரசியல் போராட்ட உணர்வை ஊட்டியவர் ஜோஹன்.

அவரைக் காட்டிக்கொடுப்பதற்கென்றே பிறந்தவராக வந்தார் ஒருவர். அவர் பெயர் விஸ்டுஸ். உதவித் தலைமை ஆசிரியர். அரசாங்கத்துக்கு அவர் காட்டிக் கொடுத்ததன் பேரில் ஜோஹன் கைது செய்யப்பட, அந்தச் செய்தி மார்க்ஸின் நெஞ்சில் ஒரு பழுக்கக் காய்ச்சிய ஈட்டியாகச் செருகப்பட்டது.

இறுதித் தேர்வுகள் முடிந்தன. அப்போது தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று இருந்த விஸ்டுஸ்ஸிடம் மாணவர்கள் அனைவரும் சான்றிதழ் பெற்றுக்கொண்டு நேரில் விடைபெறும் நேரமும் வந்தது. மாணவர்கள் ஒவ்வொருவராக உள்ளே சென்று வர, மார்க்ஸ் மட்டும் அந்த அறைக்குள் நுழைய மறுத்து, வெளியிலேயே நின்றுவிட்டார். தலைமை ஆசிரியரிடம் விடைபெற்று வருமாறு ஹென்ரிச் தன் மகன் மார்க்ஸிடம் மன்றாடினார். 'காட்டிக் கொடுத்த வாத்தியாரை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன்' என உறுதியாக மறுத்து, வெளியேறினார் மார்க்ஸ்.

அதேசமயம், ஆகஸ்ட் 25, 1835-ம் தேதியிட்ட அவருடைய நன்னடத்தைச் சான்றிதழில், அவரது எதிர்காலத்தை முன்கூட்டிக் கணிக்கும் வகையில் ஆச்சர்யப்படத்தக்க சில வரிகள் எழுதப்பட்டு இருந்தன. 'கார்ல் மார்க்ஸ் எத்தனை கடினமான இலக்கிய வரிகளாக இருந்தாலும், அவற்றைத் துரிதமாகப் படித்து, முற்றிலும் புதிய கோணங்களில் விளக்கம் கூறும் ஆற்றலைப் பெற்றிருக்கிறான். இந்த விசேஷ ஆற்றலில் அவன் கவனம் செலுத்தி னால், எதிர்காலத்தில் அவன் பயனுள்ள மனிதனாக உருவாக வாய்ப்பிருக்கிறது' என அதில் எழுதப்பட்டு இருந்தது.



பள்ளிப் படிப்பு முடிந்ததும் தத்துவம் படிக்கவே விரும்பினார் மார்க்ஸ். ஆனால், ஹென்ரிச்சுக்கோ தன் மகனை வக்கீலாக்கி, ஏற்கெனவே தனக்கு ட்ரையர் நகர கத்தோலிக்கர்களிடம் இருந்த பழைய கணக்குகளைச் சரிசெய்ய விருப்பம். தனது பாதையைத் தானே தேர்ந்தெடுக்க முடியாத கோபம், ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் அதன் போலித்தனமான மதிப்பீடுகள் மீதும் மார்க்ஸுக்கு எரிச்சலை வரவழைத்தது. வேறு வழியில்லாமல் தந்தையின் விருப்பத்துக்காகச் சட்டம் பயில, பான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

பான் பல்கலைக்கழகத்திலும் மார்க்ஸின் வாழ்க்கை, அவரது பெற்றோருக்குப் பெரும் தலைவலியையும் வருத்தத்தையுமே தந்தது. காரணம், மற்றவர்களைப் போல

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே ஊசலாடும் வாழ்க்கையைத் தக்க வைத்துக்கொள்ளப் போராடும் சராசரி மனிதனாக வாழ்வதில் அவருக்கு விருப்ப மில்லை. ஒரு மனிதனாகத் தன்னைச் சுற்றி எழுப்பப்படும் கல்வி, குடும்பம், வேலை போன்ற வேலிகளையும், அதன் காரணமாக அரசாங்கத்துக்குக் கைகட்டி வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தையும் தகர்க்க விரும்பினார்.

அப்போது பான் நகரில் குடிகாரர்கள் சங்கமொன்று இருந்தது. சமூக ஒழுக்கக் கேடாகக் கருதப்படும் குடிகாரர்கள் சங்கத்தில் உறுப்பினராகி, ஒரு கட்டத்தில் அந்தச் சங்கத்துக்கே தலைவராகவும் மாறினார். உச்சகட்டமாக, கேளிக்கை மிகுந்த ஒரு நாளில் கைது செய்யப்பட்டு சிறைக் காவலில் வைக்கப்பட, தகவல் வீட்டுக்குப் போனது.

மார்க்ஸின் அம்மாவால் இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை. அவரது தந்தை பல்கலைக்கழகத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். தன் மகனை பெர்லின் பல்கலைக்கழகத்தில் சேர்க்கஇருப்பதால், உடனே பல்கலைக்கழகத்திலிருந்து அவனை விடுவிக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தார். இப்படியாக பான் நகரத்தில் மார்க்ஸின் ஒழுங்கீனமான வாழ்க்கைக்கு முடிவு எழுதப்பட்டது.

நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார் மார்க்ஸ். அது கோடைக் காலமாதலால் பெர்லின் பல்கலைக்கழகம் சென்று சேர, இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தன. விடுமுறையிலாவது வீட்டிலேயே இருக்கும்படி மகனுக்கு வேண்டுகோள் வைத்தார் அப்பா ஹென்ரிச்.

அந்த இரண்டு மாதங்கள் தான் உலகின் ஒப்பற்ற காதல் கதையின் துவக்க காலம்.

அவர் பெயர்... ஜென்னி வான் வெஸ்ட் ப்ளான்!


உலகின் மிகச் சிறந்த பூ ஒன்று இருக்குமானால் அதுகூட தோற்றுப்போகும் அவளிடம்! ஓர் எரிமலையின் இதயத்தில் வாடாத மலராக வாழ்ந்த ஜென்னியின் வாழ்வில் நாம் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது.

**அ**ற்புதங்கள் அனைத்தினும் அற்புதம்... காதல்!

அந்தக் காதலே பூமியைக் குளிர்விக்க மனித உருவெடுத்து தேவதையாகத் தோன்றினால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தார் ஜென்னி.

ரைன்லாந்து பகுதியின் உயர்ந்த பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த ‘லுட்விக் வான் வெஸ்ட் ப்ளான்’ என்பவரின் மகளாக, 1814-ம் ஆண்டு பிறந்தாள் ஜென்னி. எதற்கும் பதற்றப்படாத பாங்கு, எதையும் உற்றுக் கவனிக்கும் சுபாவம், எல்லோரையும் அரவணைக்கும் பேரன்பு போன்ற அருங்குணங்கள் யாவும் யாரும் சொல்லித் தராமலே அவளது ரத்த அணுக்களில் ஊறிக்கிடந்தன. அவள் வளர்ந்து

பெரியவளானபோது, ரைன் நகரமே அவளைப் பற்றிக் கிசுகிசுத்துப் பேசி, வியந்து மருகியது. அவள் வசித்த வீதியில் மாலை நேரங்களில் சைக்கிள் மணிச்சத்தங்கள் சற்று அதிகமாகக் கேட்கத் துவங்கின. பல சைக்கிள்களுக்கு அந்தப் பணக்கார வீட்டின் முன், செயின் கழன்றுகொண்டன. பிரபுக்கள் பலர் காரணமே இல்லாமல் அடிக்கடி அவளது அப்பாவைப் பார்க்க, மலர்ச் செண்டுகளுடன் வீட்டுக்கு வந்து தலையைச் சொறிந்தனர். இப்படி நகரமே பெரும் மயக்கத்தில் வீழக் காரணம், ஜென்னி எனும் அந்த நங்கையின் அசாதாரண அழகு.



நல்லுணர்வுகளால் அவளது இதயம் நிரம்பி வழிந்ததால், அவளது கண்களில் எப்போதும் அசாதாரணமானதொரு ஒளி பிரகாசித்துக்கொண்டு இருந்தது. ஜென்னி, நகரத்தின் அங்காடி வீதிகளுக்கும் திருச்சபை சடங்குகளுக்கும் வரு கிறாள் என்றால், கூட்டம் முண்டி யடிக்கும்.

தங்களது பணக்காரத்தனத் தைக் காட்ட அவர்கள் செய்யும் கோமாளித்தனங்கள் ஜென்னிக்கு உள்ளூர ஒரு வருத்தமான சிரிப்பை ஏற்படுத்தும். அகங்காரமற்ற அறிவும், தன்னலமற்ற தியாகமும், பெண்களை மதிக்கும் சுபாவமுமே ஓர் ஆணின் உண்மையான அழகு என்பதை ஜென்னி நன்கு அறிந்திருந்தாள். அதனால்தான், நீண்ட நாள் கழித்து வீடு திரும்பிய மார்க்ஸை முதல் முறையாகக் கண்டதும், சட்டென அவளது இதயத் தோட்டத்தின் மலர்களினூடே குளிர்ச்சி நிரம்பிய காற்று ஊடுருவிச் செல்வதை அவளால் உணர முடிந்தது.

ஜென்னி... மார்க்ஸை விட நான்கு வயது மூத்தவர். அடுத்தடுத்த வீடாக இருந்ததால், சிறு வயதிலிருந்தே மார்க்ஸின் சகோதரிகளுக்கும் ஜென்னிக்கும் இடையே அப்படியொரு தோழமை. குறிப்பாக, மார்க்ஸின் மூத்த சகோதரியான சோபியா, ஜென்னியின் உயிர்த்தோழி. அந்தச் சிறு வயது நட்பு பருவ வயதில் மேலும் இறுகியது. கைகோத்துக்கொண்டு இருவரும் தோட்டத்துச் செடிகளினூடே நடந்தபடி தத்தமது கனவுகளைப் பரிமாறிக்கொண்டனர். இந்தச் சமயத்தில்தான், பான் பல் கலைக்கழகப் படிப்பைப் பாதியில் நிறுத்திக்கொண்டு பெட்டியும் படுக்கை யுமாக வீடு திரும்பியிருந்தார் கார்ல் மார்க்ஸ். ஏற்கெனவே கல்லூரியில் மார்க்ஸ், குடிகாரர் சங்கத்தில் சேர்ந்து செய்த அட்டூழியங்களை எல்லாம் சோபியா மூலமாகக் கேள்விப்பட்டு இருந்தார் ஜென்னி. இதனாலேயே கார்ல் மார்க்ஸைப் பார்ப்பதில் இயல்பாகவே ஓர் எதிர்பார்ப்பு அவருக்குள் உருவாகியிருந்தது.

ஜென்னியை முதல்முறையாகக் கண்டதும், மார்க்ஸின் இதயம் இரண்டாகப் பிளந்தது. அந்தக் கால கட்டத்தில் பெரும் குழப்பமும், ஒருவித மன உளைச்சலும் அவரைத் தீவிரமாக பிடித்து ஆட்டிக்கொண்டு இருந்தன. அவை அனைத்தும் ஜென்னியின் கண்களைச் சந்தித்த கணத்தில் விலகி, சட்டெனத் தன்னுள் ஒரு குளுமை படர்வதை அவர் உணர்ந்தார். ஆனாலும், தன் காதலை மார்க்ஸால் உடனே வெளிப்படுத்த முடியாத சூழல். காரணம், ஜென்னியோ ரைன் லாந்தின் மிகச் சிறந்த அழகி. கார்ல் மார்க்ஸோ காணச் சகியாத தோற்றம். கண்கள் மட்டுமின்றி அவரது கேசம், தோலின் நிறம் எல்லாமே கறுப்பு. ஜென்னி, அரச குலத்துக்கு நிகராகக் கருதப்படும் பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். மார்க்ஸோ ஜெர்மானி யர்கள் வெறுப்புடன் நோக்கும் யூத இனத்தைச் சேர்ந்தவர்.

ஜென்னி




இதன் காரணமாகவே மார்க்ஸ் தன் எண்ணத்தை வெளிப்படுத்தத் தயங்கி, காதலை மனசுக்குள்ளேயே மூடி மறைத்தார். ஆனால், அவர்களின் இதயங்களை இணைக்கும் பாலமாக மூவர் இருந்தனர். ஒருவர், மார்க்ஸின் சகோதரி சோபியா. மற்றவர் ஜென்னியின் தந்தை லுட்விக். மூன்றாமவர் ஷேக்ஸ்பியர். ஆம், லுட்விக்கும் கார்ல் மார்க் ஸும் ஷேக்ஸ்பியரின் தீவிர ரசிகர்கள். லுட்விக் அடிக்கடி மார்க்ஸைத் தன் வீட்டுக்கு அழைப்பார். இருவரும் எதி ரெதிரே அமர்ந்து, மனதினுள் மனப்பாடமாகிப்போன ஷேக்ஸ்பியரின் கவிதைகளை உரக்கப் பாடி, வியந்து பேசுவார்கள். சட்டென அந்த வீடே கவிதைகளால் நிரம்பும். தன்னையும் மீறி மார்க்ஸினுள்ளிருந்து கவிதாவேசம் பீறிட்டெழும். மார்க்ஸ் கிளம்பிப் போனதும், அந்த வீட்டில் வெறுமை சூழும். மார்க்ஸ் விட்டுச்செல்லும் கவித்துவ வரிகளால், உள் அறையில் கட்டிலில் படுத்துக்கிடக்கும் ஜென்னியின் இதயம் விம்மிக்கொண்டு இருக்கும். அவரது கண்ணீரால் தலையணை ஈரமாகியிருக்கும்.

காதல் ஒருபோதும் வார்த்தைகளால் பிறப்பதில்லை. மௌன மொழி யால் இரண்டு இதயங்கள் பேசிக்கொள்ளும்போது மட்டுமே அது நிகழ்கிறது. ஒரு மழைத்துளி வானிலி ருந்து பூமியில் விழுவது போல, எவருக்கும் தெரியா மல் இருவரும் தங்கள் காதலைப் பரிமாறிக்கொண் டனர். தனக்காக மார்க்ஸ் எழுதிய காதல் கவிதை களைக் கண்டதும் ஜென்னி யின் இதயத்தினுள் ஆயிர மாயிரம் றெக்கைகள் விரியத் துவங்கின. ஜென்னியும் தன்னைக் காதலிக்கிறாள் எனத் தெரிந்ததிலிருந்தே மார்க்ஸுக்குள் படபடப்பு கூடியது. ஜென்னி எனும் அசாதாரணமான பெண் தன் வாழ்வில் வரவேண்டுமென்றால், தானும் தனது வாழ்க்கையும் அசாதாரணமானதாக இருக்க வேண்டும் எனும் எண்ணம் அவரைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தது.

மிருகங்களைப் போல வயிற்றுப் பிழைப்புக் காக உண்டு உறங்கி, உயிர் வாழும் வாழ்க் கையை அவர் ஏற்கெனவே வெறுத்திருந் தாலும், ஜென்னி அவரது மனதினுள் பிரவேசித்தபின்புதான் அந்த எண்ணங் கள் ஒரு அர்த்தத்தைத் தேடி முன்னிலும் தீவிரமாகப் பயணிக்க ஆரம்பித்தன. படித்து டாக்டர் பட்டம் பெறுவதன்

மூலம் ஓரளவு அந்தத் தகுதியை அடையமுடியும் என மார்க்ஸ் நம்பினார். மேலும், தன்னைப் பற்றிக் கவலைப்பட்டு வரும் பெற்றோரை அது சந்தோஷப்படுத்தும் என்பதை நன்கு உணர்ந்த மார்க்ஸ், பெர்லின் பல்கலைக்கழகத்தில் தத்துவம் படிக்க விண்ணப்பித்தார். ஜென்னியால் இந்தத் திடீர் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இருவரும் கலந்து பேசினர். தற்போது நிச்சயம் மட்டும் செய்து கொள்வது என்றும், பிற்பாடு மார்க்ஸ் சுயமாகச் சம்பா திக்கும் தகுதியை முழுமையாக அடைந்தபின் திருமணம் செய்துகொள்வது என்றும் முடிவு செய்தனர். ஒப்பந்தப் படி நிச்சயமும் நடந்தது. பின் இரு இதயங்களும் பிரிந்தன. மார்க்ஸ் தன் வாழ்க்கையின் புதிய காற்றைச் சுவாசிக்க பெர்லினை நோக்கிப் புறப் பட்டார்.

அந்தக் காலகட்டத்தில், ஜெர்மனி மாணவர்களை தீவிரமானதொரு அறிவுத் தாகம் விரட்டிக்கொண்டு இருந்தது. பெர்லின் பல்கலைக்கழகத்தில் அந்தத் தாகம் உச்சமாக இருந்தது. அறிவுத் தாகத்தில் திளைத்துக்கொண்டு இருந்த அத்தகைய மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவர்கள் சங்கம் எனும் ஒன்றை நிறுவி, காரசாரமாக விவாதித்தனர்



அந்தக் காலத்தில் புகழ்மிக்க கவியாக இருந்த ஹென்ரிச் ஹெய் னேவின் கவிதைகளை மாணவர்கள் மனப்பாடமாக ஒப்பித்தனர். மார்க்ஸும் அவரது வார்த்தை அலைகளால் புரட்டி எடுக்கப்பட்டார். அதுபோலவே மாணவர் களை வசீகரித்த மற்றொரு மேதை ஹெகல்.


‘எந்த ஒரு தொழிலிலும் மூலதனம் போட்டுவிட்டதால் மட்டுமே ஒருவன் முதலாளியாகிவிட முடி யாது. மாறாக, தொழிலாளர்கள் இணைந் தால் மட்டுமே அவன் முதலாளியாக உருவாக முடியும். ஆகவே, தொழிலாளி இல்லாமல் எந்த முதலாளியும் இல்லை; முதலாளி இல்லாமல் தொழிலாளியும் இல்லை. இதில் யாரும் மேலும் இல்லை; கீழும் இல்லை. இருவரும் சமம்!’ - ஹெகலின் இத்தகு சிந்தனைகள் முதல் முறையாக மார்க்ஸுக்கு வரலாற்றையும் பொருளாதாரத்தையும் ஒன்றோடு ஒன் றாகப் பொருத்திப் பார்க்கும் அறிவைக் கொடுத்தன. என்றாலும், ஹெகலின் கருத்துக்களில் மார்க்ஸால் ஏற்க முடியாத சில கருத்துக்களும் இருந்தன. மன்னர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் போன்ற ஹெகலின் கருத்துக்களில் மார்க்ஸ் முரண்பட்டார்.

இது போல, ஹெகலின் தத்துவங்களில் முரண்பாடு கொண்ட வேறு சிலரும் மார்க்ஸோடு சேர்ந்துகொண்டனர். இவர் கள் ‘இளைய ஹெகலியர்கள்’ என்ற புதிய குழுவாகத் தங்களை அறிவித்துக் கொண்டனர். இதனால், ஆய்வாளர்கள் சங்கத்தில் இரண்டு குழுக்களிடையே காரசார விவாதங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்தன. முந்தைய நாள் எதிரிகள் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்காக மார்க்ஸ் இரவு முழுக்கப் படிக்க ஆரம்பித்தார். மறுநாள் சங்கத்தில், அவரது வாதத்தால் எதிரிகள் வாயடைத்து நின்றனர். இப்படியாக, தொடர்ந்து அவருக்குள் பெரும் அறிவுத் தீ, கொழுந்துவிட்டு

எரியத் தொடங்கியது. கடந்துபோன வரலாற்றையும் தத்துவங்களையும் மார்க்ஸ் தேடித் தேடி முழுதாகப் படிக்கத் துவங்கினார். எதிர்ப்புகள் மூலமே வரலாறு திருப்பப்பட்டு இருக்கும் ரகசியம் புலனாகியது. அது போல தானும் தனது தத்துவங்களின் மூலமாகத் தொழிலாளர்களுக்கு ஆதரவான புதிய வரலாற்றைத் துவக்கும் ஆவல் அவருக்குள் பீறிட்டு எழுந்தது. இதன் காரணமாக ஆய்வாளர்கள் சங்கமே அறிவுத் தீயால் பிரகாசித்தது. மார்க்ஸ் வருகிறார் என்றால், ஐந்து நிமிடங்களுக்கு முன்பாகவே அங்கு பரபரப்பு தொற்ற ஆரம்பித்தது. படித்துக் களைத்த உறங்காத விழிகளும், வாரப்படாத கேசமுமாக, தாடியை நீவிவிட்டுக்கொண்டு மாணவர்கள் புடைசூழ மார்க்ஸ், பல்கலைக்கழக வராந்தாவில் ஒரு சிங்கம் போல நடந்து வருவதைப் பார்த்தால், பாடத்தை நிறுத்திவிட்டு ஆசிரியர்களும்கூட முண்டியடித் துக்கொண்டு அவரது பேச்சைக் கேட்கக் கூடுவர். மார்க்ஸ் போலி அறிவுஜீவிகளைத் தினந்தோறும் புரட்டியெடுக்கும் தகவல் பல்கலைக் கழகத்தில் பரபரப்பாகப் பேசப் பட்டது.

மார்க்ஸின் கருத்துக்களுக்கு ஆதர வாகவும் மிகுந்த தூண்டுகோலாகவும் இரண்டு பேராசிரியர்கள் இருந்த னர். ஒருவர் ஃபயர் ஃபாக்ஸ்; மற்றொருவர் கோபன். இருவருமே மார்க் ஸின் அறிவுத்திறனைக் கண்டு வியந்து, அவரின் தோழர்களாகவே தங்களை மாற்றிக்கொண்டனர்.

இப்படி மார்க்ஸ், தன்னை முழுவதுமாக அறிவுப் பசிக்குத் தீனியாக்கிக் கொண்ட காரணத்தால், தன் மீது உயிரையே வைத்திருந்த ஜென்னிக்கு கடிதம் போடுவதைக்கூட மறந்து போனார். கடிதம் வராத காரணத்தால் ஜென்னியின் நிலைமை தர்மசங்கடத்துக்கு உள்ளாகியது. ‘இனி மார்க்ஸ் வர மாட்டான். அவன் இந்நேரம் உன்னை முழுவதுமாக மறந்து, வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு இருப்பான். அந்தப் பொறுப் பற்றவனை மறந்து, நீயும் வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்’ என உபதேசங்கள்... வற்புறுத்தல்கள்! மற்றவர்கள் இப்படிச் சொன்ன போதுகூட ஜென்னி மனம் வருந்த வில்லை. மார்க்ஸின் தந்தையான ஹென்ரிச் மார்க்ஸே அவளிடம் வந்து, தன் மகனை மறந்துவிடும்படி சொன்னதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை. ‘உன்னுடைய தகுதிக்கும் குணத்துக்கும் என் மகன் பொருத்தமானவனே அல்ல! அவன் எப்படியெல்லாமோ வருவான் என எதிர்பார்த்தேன். எங்கள் நம்பிக்கைகளில் அவன் மண்ணைப் போட்டதுதான் மிச்சம்’ என அவர் வருத்தத்துடன் ஜென்னியிடம் கூறியிருந்தார். ஆனாலும், ஜென்னி மனம் தளரவில்லை. புன் சிரிப்புடன் அவருக்கு ஆறுதல் கூறி அனுப்பிவைத்தாள்.



அடுத்த சில நாட்களில், ஜென்னியின் முகவரிக்கு ஒரு பார்சல் வந்தது. அதை வாங்கிப் பிரித்தபோது, ஜென்னியின் கைகளிலிருந்து சடசடவெனச் சரிந்து, அறை முழுக்கத் தவழ்ந்தன காகிதங்கள். அனைத்தும் காதல் கவிதைகள். அவற்றிலிருந்த மார்க்ஸின் கையெழுத்தைப் பார்த்ததுமே ஜென்னிக்குள் உணர்ச்சிப் பேரலைகள்!

அதில் ஒரு தாளை விரல்கள் நடுங்க, எடுத்துப் பார்த்தாள். அவளால் அதை முழுவதுமாகப் படிக்கமுடியவில்லை. கண்ணீர் ததும்பியதால், எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தன. சிரமப்பட்டு அதிலிருந்த ஒரு வரியை வாசித்ததும், அதுவரை கண்களில் தேங்கியிருந்த நீர் மடை திறந்த வெள்ளம் போல் கொட்டி கடிதத்தை முழுவதுமாக நனைத்தது. அந்தக் கண்ணீர் பெருக்குக்குக் காரணமான வரிகள் இவைதான்...

'இனி வரும் நூற்றாண்டுகள்
அனைத்துக்கும்

காதல் என்றால் ஜென்னி...
ஜென்னி என்றால் காதல்!'

## புரட்சியின் கைகளால் எழுதப்படுவதுதான் வரலாறு!

புறப்படும்போது எல்லா காற்றும் பூங்காற்றே!

வரலாற்றையே புரட்டிப்போடும் சூறாவளியாக கார்ல் மார்க்ஸை மாற்றியது அன் றைய ஜெர்மனியின் அரசி யல் சூழல்!

பிரஷ்யா... இதுதான் அப்போது ஜெர்மனியின் பெயர். பிரஷ்ய மன்னனின் பெயர் மாகா பிரட்ரிக். பெர்லின் மற்றும் பான் பல்கலைக்கழகங்களில் மன்னராட்சிக்கு எதிராக வாதம் செய்து வந்த இளைய ஹெகலியர்கள் கூட்டத்தை அவனுக்கு அறவே பிடிக்கவில்லை. இப்படியே விட்டால் நாட்டில் புரட்சி ஏற்படுத்தி தன்னைக் கவிழ்த்துவிடுவார்கள் என்ற பயத்தில், அவர்களைக் கண்காணிக்க உளவாளிகளை நியமித்தான். மார்க்ஸுக்கு தத்துவ ஆசான்களாக விளங்கிய பயர் பாக் மற்றும் கோப்பன் ஆகியோருக்கு பல்கலைக்கழகங்களில் நுழையவே தடை விதிக்கப்பட்டது. அதுவரை தத்துவங்களில் மூழ்கிக்கிடந்த மார்க்ஸின் மனம் விழித்தெழுந்தது. மன்னராட்சி மேல் மார்க்ஸுக்குக் கடும் கோபம் கிளம்பியது!



மன்னன் என்பவனும் சாதாரண மனிதனே. ஒரு மனிதன் தன் விருப்பத்துக்கேற்ற மாதிரி ஒட்டுமொத்த மக்களையும் வளைப்பது அநாகரிகம். இதற்கு முடிவுகட்ட வேண்டுமானால் மக்களை அவனுக்கு எதிராகத் திருப்ப வேண்டும். ஆனால், மக்களோ, மன்னர்களைக்

கடவுளின் தூதுவர்களாகக் கும்பிட்டார்கள். ஆண்டாண்டு காலமாக மக்களை அடிமைப்படுத்திய இந்த அச்சத்தை அடித்து நொறுக்கிவிட்டால் போதும். ஆனால், கிணற்றுப் பாசியாக மக்களின் மூளைக்குள் ஒட்டிக்கிடக்கும் அச்சத்தைப் போக்குவது

சுலபமில்லை. மேலும் மன்னர்களும் மதவாதிகளும் கூட்டுக் களவாணிகள். எனவே, மார்க்ஸ் யோசித்தார்.

‘மன்னனுமில்லை மகேசனுமில்லை. மக்கள் அனைவரும் சமம்’ என மேடையில் முழங்கினால் யாரும் கேட்க மாட்டார்கள். அவர்களுக்கு அடிப்படையையே விவரமாக விளக்க வேண்டும். ஆதியில் மனிதன் எப்படி வாழ்ந்தான், எப்படி கூட்ட மாகக் கூடி தங்களுக்கான தலைவரைத் தேர்ந்தெடுத்தான். பின் எப்படி அவன் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, சொத்து சேர்த்து, மக்களை அடிமைப்படுத்தி, அரசனானான் என விளக்க வேண்டும். இப்படி அரசனின் கைக்கூலியாக இருந்தவர் கள்தான் பிரபுக்களாகவும் முதலாளி பூர்ஷ்வாக்களாகவும் உருவெடுத்து, மக்களை மேலும் அடிமைப்படுத்தினர் என்பதையெல்லாம் படிப்படியாக அனைவரும் ஏற்றுக் கொள்கிற வகையில் விளக்கி, அதன் பிறகே மக்களை மன்னருக்கு எதிராகப் புரட்சியில் திருப்ப வேண்டும். தான் கனவு காணும் புதிய சமுதாயம் மலர, அதுதான் ஒரே வழி என மார்க்ஸ் நம்பினார். பிற்பாடு அவர் மேற்கொண்ட அத்தனை உழைப்புக்கும், கண்டுபிடித்த அத்தனை தத்துவங்களுக்கும், உருவாக்கிய கோட்பாடுகள் அனைத்துக்கும் அவரது இந்தச் சிந்தனையே ஆதார ஊற்று!

ஆனால், மன்னராட்சிக்கு எதிரான மார்க்ஸின் கருத்துக்களும் செயல் பாடுகளும் ஒருவருக்கு அறவே பிடிக்கவில்லை. அவர் ஹென்ரிச் மார்க்ஸ் - மார்க்ஸின் அப்பா.

உலகம் முழுக்க அப்பாக்கள் பொதுவானவர்கள். பிள்ளைகள் குறித்து அவர்கள் காணும் கனவெல்லாம் ஒன்றே ஒன்றுதான்... நன்றாகப் படித்து, பொறுப்பான வேலைக்குப் போய், தகுந்த வயதில் கல்யாணம் செய்து, பிள்ளைகளைப் பெற்று, கடைசியில் அவனும் தன்னைப் போலவே அடையாளமில்லாத மற்றொரு மனிதக் கால்நடையாக உயிர் நீக்க வேண்டும். எந்தத் தகப்பனும் ‘வாழும் கணம் ஒரு நிமிட மேனும் அதனைச் சமூகத்துக்காக வாழ்ந்து செத்து மடி’ என மகனிடம் கூற மாட்டான். அப்படித்தான் இருந்தார் மார்க்ஸின் அப்பாவும்.

ஒருகட்டத்தில் தன்னைத் திருப் திப்படுத்தாவிட்டாலும் பரவா யில்லை, குறைந்தபட்சம் ஜென்னிக் காகவாவது மகன் மாற வேண்டும் என எதிர்பார்த்தார். அந்த வெறுப்பில் தான் அவர் ஜென்னியிடம், ‘அவனை நீ நம்பாதே. வேறு யாரையாவது கல்யாணம் செய்துகொள்’ என்றுகூட கூறினார். ஆனால், மார்க்ஸோ அப்பாவின் குரலையே கேட்க முடியாதவராக, தனது தேடலில் வெகு தூரம் பயணித்திருந்தார். இருபத்து நாலு மணி நேரமும் சிந்தனை ஒரு வேட்டை நாயைப் போல அவரைத் துரத்திக்கொண்டே இருந்தது. தனக்குள் தோன்றிய தத்துவத்தை நிரூபிக்க அவர் வரலாறு, தத்துவம், பொருளாதாரம் என அனைத்தையும் படிக்க வேண்டியதாக இருந்தது. கிட்டத்தட்ட தன் கையளவு மூளைக்குள் உலகத்தையே திணித்துவிட அவர் முயன்றுகொண்டு இருந்தார்.




இந்தச் சூழலில்தான் 1838-ல் அதிர்ச்சியூட்டும் செய்தி ஒன்று ட்ரையர் நகரத்திலிருந்து இடி போல அவரைத் தாக்கியது. தந்தையின் மரணச் செய்தி மார்க்ஸை நிலைகுலைய வைத்தது. கடைசி வரை தந்தை தன்னைப் புரிந்துகொள் ளாமலேயே மரணமடைந்தது அவரது பெரும் மனவேதனைக்குக் காரணமாக இருந்தது.

அவரது அம்மா ஹென்ரிட்டாவோ, மகனை அறவே வெறுத்தார். அவர் கண் முன் இருந்ததெல்லாம் கணவன் இறந்த நிலையில் நிராதரவாக கல்யாண வயதில் மூன்று பெண்களும், அதற்கு எந்தவிதத்திலும் பொறுப்பேற்காத பொறுப்பற்ற மகனும்தான்.

தந்தையின் மரணம் மார்க்ஸுக்கு பொருளாதாரரீதியாகவும் மிகவும் நெருக்கடியைத் தந்தது. தொடர்ந்து படிக்க முடியாத நிலை. வீடும் உறவும் முழுவதுமாகத் துண்டித்துப் போன நிலையில் மார்க்ஸ் மிகவும் வேதனைப்பட்டார். அப்போது அவரது வேதனைகளுக்கு ஆதரவாக வருடிக்கொடுத்த ஒரு கரம்... ஜென்னி.

மார்க்ஸ் மீண்டும் பெர்லினுக்குச் சென்று தனது படிப்பைத் தொடர்ந்தார். ஆய்வுப் படிப்பை முடித்து டாக்டர் பட்டம் பெற்றார். அடுத்து அவருக்கு இருந்த திட்டமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஜென்னியைத் திருமணம் செய்ய வேண்டும். திருமணம் என்றால் சட்டென முடிகிற காரியமா? அதுவும் பிரபுக்கள் வம்சத்துப் பெண். தன்னிடம் தம்படி காசுகூட இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் என்றாலும் குறைந்தபட்சம் ஒரு வேலையாவது இருக்க வேண்டுமே. ரைன் கெஜட் பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்து, பத்தே மாதத்தில் அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.



கார்ல் மார்க்ஸின் எழுத்துக்கள் ஜெர்மானியரின் மனதிலே நம்பிக்கையின் வெளிச்சத்தை ஏற்றத் துவங்கின. பத்திரிகையின் வியாபாரமும் சடசடவென எகிற ஆரம்பித்தது. அப்போது அந்த பத்திரிகைக்குக் கிறுக்கலான கையெழுத்தில் ஏங்கெல்ஸ் எனக் கையெழுத்திட்டு அடிக்கடி லண்டனிலிருந்து கட்டுரைகள் வந்தன. நூற்றாண்டுகளைக் கடந்து தன்னோடு பயணிக்கப்போகும் பெயர் அது என்பதை மார்க்ஸும் அறியவில்லை. ஆனால், அவரது கட்டுரைகள் வந்தாலே, ஆர்வமாக அதன் முதல் வாசகனாக வாசிக்கத் துவங்குவார் மார்க்ஸ்.

காட்டில் விறகு வெட்டிப் பிழைத்து வந்த அப்பாவி மக்களைத் திருடர்களாகக் குற்றம் சுமத்தி அரசு கைது செய்து வந்ததைக் கண்டித்தும் மோசலி ஆற்றங்கரையில் திராட்சை பயிரிடும் விவசாயிகளின் மோசமான நிலை குறித்தும் மார்க்ஸ் தனது இதழில் ஆவேசக் கட்டுரை எழுத, அது ஆட்சியாளர்களைக் கொதிப் படையவைத்தது. இதழை நடத்தி வந்த உரிமையாளர்கள் அரசாங்கத்தின் அச்சுறுத்தல் காரணமாகப் பயந்தனர்.

இதனிடையே ஜென்னியின் தந்தையாரான வெஸ்ட்ப்ளான் மறைவு காரணமாக, ஜென்னியின் குடும்பத்தினர் க்ரூட்ஸ்னக் நகருக்குக் குடியேறினார்கள். ஜென்னியெனும் பொறுமைக்கு அப்போது 29 வயதாகிவிட்டிருந்தது. தனது இளமையின் பாதி வருடங்களைத் தூய காதலின் பொருட்டும் அவரது கனவாம் உலக மக்களின் நன்மைகளின் பொருட்டும் தியாகம் செய்திருந்தார் ஜென்னி. அந்தத் தியாகத்துக்கு ஒரு நல்ல முடிவும் வந்தது.




1843-ம் ஆண்டு ஜூன் 19... கார்ல் மார்க்ஸ் - ஜென்னி வான் வெஸ்ட்ப்ளான் என்ற இதயங்கள் இரண்டும் இணைந்தன. க்ரூட்ஸ்னக் நகரத்தின் வீடொன்றில் அந்தத் திருமணம் எளிமையின் அழகுடன் நடந்தேறியது. அன்றைய தினத்தில் அவர்களின் திருமணத்துடன் அவர்கள் அறியாமலே அவர்களால் இன்னும் இரு சம்பவங்கள் நிகழ்ந்தன. உலகின் தலை சிறந்த காதலுக்கான இலக்கணப் புத்தகம் மூடிவைக்கப்பட்டு, அதே நாளில் உலகின் தலை சிறந்த குடும்ப வாழ்க்கைக்கான இலக்கணப் புத்தகம் திறக்கப்பட்டது.

தொடர்ந்து ஜென்னியின் வீட்டில் குடியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம். எந்த பிரபுக்களையும் அரச குடும்பத்தையும் எதிர்த்து மார்க்ஸ் செயல்பட்டு வந்தாரோ, அவர்கள் வீட்டிலேயே மாப்பிள்ளையாய்... என்ன செய்வது? வெளியே போனால், எங்கே தங்குவது? மார்க்ஸுக்கோ வேலையில்லை. கணவனின் தர்மசங்கடங்களை உணர்ந்த ஜென்னி இனியும் இந்த வீட்டில் நாம் இருந்தால் அது கணவருக்கு, அவரது கொள்கைக்கு தான் செய்யும் துரோகம் என முடிவெடுத்தார்.

1843 அக்டோபர் மாதத்தில் ஒரு இரவு நேரம் . இருவரும் வெளியே வந்தனர்.

அவர்களுக்கு முன் ஒரு நெருப்பாறு ஓடிக்கொண்டு இருந்தது. பசியும் பட்டினியும், முதலைகளும் திமிங்கிலங்களுமாக அவர்களைச் சோதிக்க வெளியே தலை காட்டாமல் நீந்திக்கொண்டு இருந்த ஆறு அது!



**வரலாற்றின் அதிசயம் என்றொரு சொல்வழக்கு இருக்கு மானால், அது முற்ற முழுக்கக் கார்ல் மார்க்ஸுக்கே பொருந்தும். உலகின் தலைசிறந்த தத்துவம், தலைசிறந்த பொருளாதாரம், தலைசிறந்த காதல், குடும்பம், என எண்ணற்ற தலைசிறந்தவற்றைத் தக்கவைத்துக்கொண்டு இருந்த அவரது வாழ்வு, தலைசிறந்த நட்புக்கும் அர்த்தம் எழுதியுள்ளது. ஜென்னியைப் போலவே மார்க்ஸின் வாழ்க்கைக்குப் பெருமை கூட்டிய அந்த நண்பர் ப்ரெட்ரிக் ஏங்கல்ஸ்.**

**இருவரும் இருவேறு துருவங்கள் என்றாலும், இருவரும் ஒரு உடலின் அறிவும் இதயமும் போல**

பிரிக்க முடியாத சக்திகளாக இணைந்திருந்தனர். மார்க்ஸ், ஏங்கல்ஸின் கண்ணாக இருந்துள் ளார். ஏங்கல்ஸ் மார்க்ஸின் கைகளாகச் செயல்பட்டு இருக்கிறார்.

மார்க்ஸ் அறிவு; ஏங்கல்ஸ் அனுபவம்.


ஒருவர் எரிமலை; மற்றவர் பனிமலை.

மார்க்ஸை யாரும் சுலபத்தில் நெருங்க முடியாது. அசட்டுதனத்துடன் யாரேனும் அருகில் போனால் ஆயிரம் மெகாவாட் மின்சாரம் அவர்களை அப்பால் தூக்கி வீசிவிடும். அதேசமயம் ஏங்கல்ஸின் அன்பு எத்தனை கொடியவரையும் அருகில் வரச்செய்து அரவணைத்துக்கொள்ளும். மார்க்ஸ், சிந்தனையின் தொடர்ச்சியில் நெடுந் தூரம் நீந்தக்கூடியவர். ஏங்கல்ஸ் சட்டென முடிவெடுத்துச் செயலில் இறங்கக்கூடியவர்.

இந்த பாசிட்டிவ்வும் நெகட்டிவ்வும் இணைந்த தருணத்தில்தான் அதுவரை இருள டர்ந்து கிடந்த உலகத் தொழிலாளர்களின் வாழ்வில் மார்க்ஸியம் எனும் பிரமாண்ட மின் சூரியன் உதயமாகியது.

அந்த நட்புதான் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகள் முதற்கொண்டு இன்று உலகின் கடைக்கோடி தொழிலாளிக்கும் தொழிலாளர் நல நிதி, மருத்துவ வசதி, போனஸ் போன்றவற்றைப் பெற்றுத் தந்திருக்கிறது.

அந்த நட்பின் வரலாறு எழுதப்படுவதற்கு முந்தைய ஏங்கல்ஸின் கதை வீடற்று அலையும் ஒரு பறவையைப் போன்றது. அவரிடம் எண்ணற்ற புதிய கருத்துக்கள் இருந்தன. ஆனால், அவற்றைச் சுமந்துகொண்டு தனியராகவே ஜெர்மன், பிரான்ஸ், லண்டன் என அலைந்துகொண்டு இருந்தார்.




சிறு வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றல் மிக்கவரான ஏங்கல்ஸ், மார்க்ஸ் பிறந்த அதே ரைன் மாகாணத்தின் பார்மன் நகரத்தில், அவருக்கு இரண்டு வருடங்கள் கழித்து, 1820ம் ஆண்டு நவம்பர் 28ம் தேதியன்று பிறந்தார். ஆச்சர்யம் என்னவென் றால், அவரின் தந்தை லண்டனில் நெசவுத் தொழிற் சாலை ஒன்றில் பங்குதாரராக இருக்கும் பெரும் முதலாளி. கவிதை எழுதும் மனது காரணமாகவோ, அல்லது தொழிலாளர்களின் துயரங்களையும் அவர் களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் அருகிலிருந்து பார்த்ததன் காரணமாகவோ ஏங்கல்ஸுக்குள் புதிய சமூக

மாற்றங்களுக்கான நெருப்பு கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது.இக் கால கட்டங்களில், பெர்லின் பல்கலைக்கழகத்துக்கு ஒரு நாள் வந்த போது, அங்கே அனைவரும் மார்க்ஸ் பற்றியும் அவரது சிந்தனை வேகத்தைப் பற்றியும் பரபரப்பாகப் பேசிக்கொண்டு இருந்ததைக் கேள்விப்பட்டார். 'யார் இந்த கார்ல் மார்க்ஸ்? அவன் என்ன நம்மைவிட உண்மையாகவும் உயர் வாகவும் சிந்திக்கக்கூடியவனா? அவனைச் சந்திக்க வேண்டுமே' என இயல்பாக அவருக்குள் ஓர் எதிர்பார்ப்பு தோன்றியிருக்கிறது.

கொலோன் என்னும் இடத்தில், ஒரு காபிக் கடையில் எதிர்பாராமல் இருவரும் சந்திக்க நேர்ந்தது. ஆனால், சூழலின் காரணமாக இருவரும் ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொண்டு விலகிச் சென்றனர். அதன் பிறகுதான், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி ரைன்லாந்து கெஜட் பத்திரிகையில் மார்க்ஸ் ஆசிரியராக இருந்தபோது, அதற்கு வந்த ஏங்கல்ஸின் கட்டுரைகளைப் படித்து வியந்திருக்கிறார். இந்தச் சூழலில், ஏங்கல்ஸின் அப்பா, மகனது கம்யூனிச நடவடிக்கைகளின் காரணமாக கடும் கோபத்துக்கு ஆளாகி, ஒழுங்காகத் தொழிலைக் கவனிக்கும்படி மகனைக் கண்டிக்க, வேறு வழியில்லாமல் வேதனையோடு லண்டன் தொழிற்சாலைக்குச் சென்றார் ஏங்கல்ஸ். தன் கொள்கைகளுக்கேற்ப தன்னால் சுதந் திரமாகச் செயல்பட முடியவில்லையே என்னும் வருத்தம் ஏங்கல்ஸுக்கு அதிகரித்தது.

இக் காலகட்டத்தில்தான் மார்க்ஸ் புது மனைவியுடன் புறப்பட்டு பாரீ ஸுக்குப் பிழைப்புத் தேடி வந்திருந்தார்.

எண் 38, வன்னியே எனும் வீதியில் வசித்து வந்த அறிவுச்சிங்கத்திடம், ரூஜ் என்கிற நண்பன், தான் ஒரு பத்திரிகை நடத்தப்போவதாகச் சொல்லியிருந்தான். .அதன்படி, அவன் மார்க்ஸை ஆசிரியராகக் கொண்டு 'ஜெர்மன் பிரெஞ்சு மலர்' என்ற பத்திரிகையைக் கொண்டு வந்தான். ஆனால், மார்க்ஸுக்கு உரிய சம்பளம் தராமல் ஏமாற்றியதோடு, 'வேண்டுமானால் நீயே இந்தப் பத்திரிகைகளைக் கொண்டு போய் விற்றுச் சம்பாதித்துக் கொள்' என்று சொல்லிவிட் டான். மார்க்ஸுக்கு வேதனை தாங்க முடியவில்லை. கர்ப்பிணி யாக இருந்த தன் மனைவியிடம் 'எப்படியும் பணம் வந்துவிடும். நாம் சந்தோஷமாக இருப்போம்' என வாக்களித்துவிட்டு வந்திருந்தார். அந்த ஆத்திரத்தில் ரூஜை கடுமையாகத் திட்டிவிட்டு வீட்டுக்கு வந்தார்.

1844, மே 1. எண் 38, வன்னியே வீட்டில் ஒரு பெண் குழந்தையின் சத்தம் கேட்டது. குழந்தையின் மழலையில் மார்க்ஸும் ஜென்னியும், சூழ்ந்திருந்த வறுமையை மறந்து சந்தோஷத்துடன் குழந்தையைக் கொஞ்சி மகிழ்ந்தனர். இதனிடையில், 'ஜெர்மன் பிரெஞ்சு மலர்' பத்திரிகை, மார்க்ஸ் நினைத்ததைவிட ஆட்சியாளர்களி டையே கடும் கோபத்தையும் கொந்தளிப்பையும் உருவாக்கியிருந்தது. அதில் ஏங்கல்ஸ் எழுதியிருந்த பொரு ளாதாரக் கட்டுரை மார்க்ஸுக்கு அதிகம் பிடித்

திருந்தது. பின்னாளில் மார்க்ஸ் இக்கட்டுரை குறித்துப் பல இடங்களில் மேற்கோள் காட்டி எழுதி இருக்கிறார்.

இந்தச் சூழலில்தான், ஏங்கல்ஸ் லண்டனிலிருந்து தனது சொந்த ஊரான பார்மனுக்குப் போகும் வழியில், சட்டென யோசனை வந்த வராக பாரீஸில் இறங்கியிருக்கிறார். தனது கட்டுரைக்கு எந்த மாதிரியான எதிர்விளைவு என்பதைத் தெரிந்துகொள்வ தற்கும், தன்னைப் போலல்லாமல் கொள்கைக் காக வாழ்க்கை யையே அடகு வைத்து வாழும் மார்க்ஸை சந்திப்பதற்காகவுமே தனது பயணத் திலிருந்து பாதியில் இறங்கியிருக்கிறார்.

அதுநாள் வரை எங்கெங்கோ அலைந்த அந்த இரு துருவங்களும் நேர்க்கோட்டில் சந்திப்பதன் மூலம் உலக வரலாறு தன்னைத் திருத்திக்கொள்ளப் போவதையும், அதில் தனக்கும் முக்கிய பங்கிருப்பதையும் அறியாத 1944ன் ஆகஸ்ட் மாத இறுதி நாளன்றில், மார்க்ஸும் ஏங்கல்ஸும் கைகுலுக்கிக்கொண் டனர். முந்தைய சந்திப்பைப் போலில்லாமல் இம்முறை ஒருவரை ஒருவர் முழுமையாக அறிந்திருந்தனர்.

மார்க்ஸின் எழுச்சி மிக்க அறிவும் ஆய்வும் அதற்கான தியாகங்களும் ஏங்கல்ஸைக் கட்டிப்போட்டன. பொருளாதாரத்தின் மீதான ஏங்கல்ஸின் மதிநுட்பம் மார்க்ஸை வசீகரித்திருந்தது. தொடர்ந்து பத்து நாட்கள் பாரீஸில் தங்கியிருந்து மார்க்ஸுடன் விவாதித்த ஏங்கல்ஸின் கண் முன்னே சுரண்டலற்ற புதிய உலகம் விரியத் துவங்கியது.அவரின் காதுகளில் தொழிலாளர்களின் விடுதலைப் பாடல்கள் ரீங்கரித்தன. அதுவரை சிந்தனை தளத்தில் மட்டுமே இயங்கி வந்த மார்க்ஸை ஏங்கல்ஸின் வார்த்தைகள், செயலில் உடனடியாக இறங்கும்படி கட்டளை இட்டன.

அக் காலகட்டத்தில், பிரான்ஸில் இரண்டு பிரச்னைகள் இருந்தன. முதலாவது போலி கம்யூனிஸ்ட்டுகளுடையது. இவர்களில் பலர் புரட்சி, புரட்சி என வாய் கிழியப் பேசிவிட்டு அழுக்கு உடைகளுடன் வரும் தொழிலாளிகளைப் பார்த்து முகம் சுளித்து ஒதுங்கிக்கொள்பவர்கள். மார்க்ஸ் இவர்களைத் தனது கட்டுரைகளின் மூலமாகவும், கூட்டங்களிலும் ஓட ஓட விரட்டியடித்தார்.

இன்னொரு பிரச்னை தொழிலாளர்களுடையது. அக் காலகட்டத்தில் பிரான்ஸில் பிரெஞ்சு தொழிலாளர்களுடன் ஜெர்மனியைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒன்றாகப் பணிபுரிந்து வந்தனர். இவர்கள் இருவரும் கூட்டாகச் சேர்ந்துகொண்டால் எங்கே அது தங்களுக்குப் பெரும் ஆபத்தாகிவிடுமோ என்று பயந்த முதலாளிகள், இரு பிரிவினருக்குள்ளும் கலகம் ஏற்படுத்தி, மோதவிட்டுக் குளிர்காய்ந் தனர். அது மட்டு மின்றி தொழிலாளர்களிடம் அதிக உழைப்பைச் சுரண்டி, குறைந்த ஊதியம் தந்தனர்.

'உலகின் எந்த மூலையில் இருந்தாலும், தொழிலாளன் என்பவன் ஒரே வர்க்கத்தைச்

சேர்ந்தவனே! அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே தொழிலாளர்கள் வாழ்வில் விடுதலை கிடைக்கும்' என மார்க்ஸ் ஆணித்தரமாகக் கூறியதோடு நில்லாமல், அவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியிலும் இறங்கினார். இது தொடர்பாக தனது எண்ணங்களை வெளியிட அவருக்கு ஒரு பத்திரிகை தேவையாக இருந்தது. நண்பர்கள் ஒன்றிணைந்து ஒரு இதழ் துவக்கினர். அதன் பெயர் 'முன்னேற்றம்'. உதித்த முன்னேற்றம் பத்திரிகையில் மார்க்ஸின் கட்டுரைகள்

வெளியாகத் துவங்கின. அதுவரை அடக்கிவைத்திருந்த கோபங்கள் மார்க் ஸிடமிருந்து ஏவுகணை வார்த்தைகளாக சீறிப்பாய்ந்து ஆட்சியாளர்களைத் துவம்சம் செய்தன. அவரது கட்டுரைகள் மக்களையும் தொழிலாளர்களையும் புரட்சிப் பாதைக்கு வரச்சொல்லி அறைகூவல் விடுத்தன. ஜெர்மானிய மன்னர் நான்காம் ப்ரெட்ரிக்கை 'பிற்போக்கின் மேலான பிரதிநிதி' என பிடறியில் அடித்தார் மார்க்ஸ். மக்களிடையே செல்வாக்கு எழுந்தது. தொழிலாளர்கள் விடிவெள்ளியாக மார்க்ஸைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.



ஜெர்மன் அரசு துள்ளிக் குதித்தது.பிரெஞ்சு அரசாங்கத்திடம் மார்க்ஸை யும் கூட்டாளிகளையும் நாடுகடத்தும்படி வேண்டியது.


1845 ஜனவரி 11ம் தேதி, பிரான்ஸில் 'முன்னேற்றம்' தடை செய்யப்பட்டது.

மற்றவர்கள் மன்னிக்கப்பட, மார்க்ஸ் மட்டும் இலக்கானார். காவலர்களால் சுற்றிவளைக்கப்பட்ட மார்க்ஸ், அடுத்த 24 மணி நேரத்துக்குள் பிரான்ஸை விட்டு வெளியேறும்படி எச்சரிக்கப்பட்டார். வீட்டுக்குச் சென்று மனைவியிடம் சொல்லக்கூட அனுமதி மறுக்கப் பட்டது.

ஆனால், ஒரே ஒரு வாய்ப்பு மட்டும் அப்போது அவருக்குத் தரப்பட்டது. ஒரே ஒரு வார்த்தை... அந்த வார்த்தையை மட்டும் அவர் சொல்லிவிட்டால் போதும், எப் போதும்போல் அவர் பிரான்ஸிலேயே அமைதியாக குடும்பம் நடத்தலாம். எந்தத் தடையும் இல்லை.

அவர்கள் கேட்ட அந்த வார்த்தை மன்னிப்பு!

உன் எதிரி யார் என்று சொல் நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்!



**சீ**றிப் பாயும் ஏவுகணைக்குப் பின்னால் பொழியும் நெருப்பைப் போல, மார்க்ஸின் பின்னிருந்து இயக்கிய மந்திரச்சொல்... புரட்சி. புதிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் புரட்சி!

அவரது சொல், செயல், எழுத்து அனைத்திலும் நெருப்புக் கங்குகள் கனன்றன. அதன் வெம்மை தாளாமல், அவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டது பிரெஞ்சு அரசு. பெல்ஜியத்தின் தலைநகரான பிரெஸ்ஸல்ஸ் வந்து சேர்ந்தார் மார்க்ஸ். சில நாட்களிலேயே ஜென்னியும் குடும்பத்துடன் குடிபெயர்ந்து வந்து, இணைந்துகொண்டார்.

தங்கள் தேசத்துக்குள் மார்க்ஸ் வந்து குடியேறியதும் பெல்ஜியம் அரசு நடுங்க ஆரம்பித்தது. 27 வயது இளைஞன் ஒருவனைக் கண்டு அரசாங்கங்களே பயந்தன என்றால், அந்த இளைஞனின் எழுத்தும் சிந்தனையும் எத்தகைய வீரியம் உள்ளதாக இருக்கும் என்பது புரிந்திருக்கும்.

'நீங்கள் பேனாவையே தொடக் கூடாது. மீறித் தொட்டால், சிறையில் தள்ளுவோம்' என எச்சரித்து, தங்க அனுமதித்தது பெல்ஜியம் அரசு. மார்க்ஸும் சம்மதித்தார். ஆனாலும், பிரச்னை எனும் பிசாசு அவரை விட்டபாடில்லை. பெல்ஜியத்திலும் அவரது நிரந்தர எதிரியான ஜெர்மனி தனது தொல்லைகளைத் தொடர்ந்தது. ஒருகட்டத்தில், தனக்கும் ஜெர்மனிக்கும் எந்த உறவும் இல்லை என்பதை அறிவிக்கும்விதமாக, ஜெர்மன் குடியுரிமையை ரத்துசெய்துகொண்டார் மார்க்ஸ். அதன் பிறகு, அவர் எந்த நாட்டின் குடியுரிமையையும் பெறவில்லை.




கூடு கலைந்த பறவைகளாகப் பிரிந்துகிடந்த நண்பர்கள் மீண்டும் இணைந்தனர். மார்க்ஸைத் தேடி பெல்ஜியம் வந்தார் ஏங்கல்ஸ். இங்கிலாந்தில் தொழிலாளர்களின் நிலைமை குறித்து ஏங்கல்ஸ் எழுதி எடுத்து வந்திருந்த புத்தகம், மார்க்ஸைப் பெரிதும் கவர்ந்தது. உலகம் முழுக்கத் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டு வரும் நிலையை, அந்தப் புத்தகம் தெளிவாக விவரித்திருந்தது. உடனே, மார்க்ஸின் மனதில் ஒரு சிந்தனை மின்னலாகப் பளிச்சிட்டது. ஏங்கல்ஸ் அப்போது அனைத்து நாட்டின் தொழிலாளர் சங்கங்களுடனும் தொடர்புகொண்டு இருந்த காரணத்தால், தொழிலாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மாபெரும் சக்தியாக ஒன்று திரட்ட முடிவெடுத்தனர்.

அப்போது லண்டனில், தொழிலாளர்களுக்கென்று 'நியாயவாதிகள்' என்றொரு சங்கம் இயங்கி வந்தது. அவர்களுடன் ஏங்கல்ஸ் பேசினார். அவர்களின் பிரதிநிதி ஒருவர் புறப்பட்டு வந்து மார்க்ஸைச் சந்தித்தார். தங்களிடம் இருப்பது வெறும் கைகள் மட்டும்தான்; உலகத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து முதலாளித்துவத்துக்கு எதிரான சக்தியாக மாற்றும் நெம்புகோல் மார்க்ஸிடம்தான் இருக்கிறது என்பதை அந்தப் பிரதிநிதி உணர்ந்தார். மார்க்ஸின் சிந்தனை நெருப்பை மனதில் ஏந்தியபடி, அந்தப் பிரதிநிதி லண்டன் விரைந்தார். லண்டன் 'நியாயவாதிகள்' சங்கத் தொழிலாளர்களின் இதயங்களில் அந்த நெருப்பு பற்றிப் பரவியது. மார்க்ஸின் வழிகாட்டுதலை அவர்கள் ஏற்க, சங்கத்தின் பெயர் 'பொதுவுடைமைச் சங்கம்' என மாறியது. தொழிலாளர்கள் தங்களை கம்யூனிஸ்ட்டுகள் என அழைத்துக்கொண்டனர்.

தொடர்ந்து பிரான்ஸ், ஜெர்மனி என இதர நாட்டின் தொழிற்சங்கங்களுக்கும் இந்தச் சிந்தனை நெருப்பு பரவ, 1847ம் ஆண்டின் ஜூன் மாதப் பகலில், லண்டன் மாநகரத்தில் ஒரு பிரமாண்டமான நட்சத்திரமாக, உலகத் தொழிலாளர்களை ஒன்றிணைத்த முதல் கம்யூனிஸ்ட் சங்கம் உதயமானது. அதன் கொள்கைகளை வடிவமைத்த மார்க்ஸ், அந்த மாநாட்டுக்குச் செல்லவில்லை. ஏங்கல்ஸ் மட்டுமே சென்றிருந்தார்.

ஐரோப்பா முழுக்கத் தொழிலாளர்களிடையே உற்சாக ஊற்றைக் கிளப்பிய கம்யூனிஸ்ட் சங்கம், அடுத்த வருடமே இரண்டாவது மாநாட்டை லண்டனில் கூட்டியது. இதற்கு ஏங்கல்ஸுடன் மார்க்ஸும் சென்றிருந்தார். கம்யூனிஸ்ட்டுகளுக்கான கொள்கைகள் கொண்ட அறிக்கையைத் தயாரிக்க, மார்க்ஸுக்கும் ஏங்கல்ஸுக்கும் அதிகாரத்தை வழங்கியது சங்கம். மார்க்ஸின் வாழ்க்கையை மட்டுமின்றி, உலக வரலாற்றையே மாற்றியமைத்த கம்யூனிஸ்ட் அறிக்கை தயாராகியது. மார்க்ஸின் புகழ் ஐரோப்பா முழுக்கப் பரவ ஆரம்பித்தது. தங்களது புரட்சிகர எண்ணங்களால், லட்சக்கணக்கான தொழிலாளர்களின் இதயங்களில் மார்க்ஸும் ஏங்கல்ஸும் பிதாமகர்களாக உருவெடுத்தனர்.


ஏங்கல்ஸ் மார்க்ஸ்

அதுநாள் வரை கண்கள் கட்டப்பட்ட கால்நடைகளைப் போலத் தெளிவற்றுத் திரிந்த தொழிலாளர்களுக்கு, இந்த அறிக்கை ஒரு புதிய பாதைக்கான, புதிய பயணத்துக்கான முதல் விடிவெள்ளியாக முளைத்தது.

முதலாளிகள் தங்கள் மீது நடத்தி வரும் உழைப்புச் சுரண்டலையும் அதற்கான மாற்றையும் அவர்கள் உணர்ந்தனர். நரம்புகள் புடைத்தன. முஷ்டிகள் உயர்ந்தன. முதல் புரட்சி பாரீஸில் வெடித்தது!

கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்த பொறி, திடீரென ஒரு நாள் பெருந்தீயாக உருவெடுத்தது. 1848 பிப்ரவரி 24ம் தேதியன்று, பாரீஸ் நகர வீதிகளில் தொழிலாளர்களும் மாணவர்களும்

கூட்டம் கூட்டமாக, பெருக்கெடுத்த ஆறு போல ஓடி வந்தனர். மன்னன் லூயி பிலிப் தப்பியோடினான். முடியாட்சி தரையில் உருண்டது. குடியாட்சி அரியணை ஏறியது!

பாரீஸில் நடந்த இந்தப் புரட்சி காரணமாக, இதர ஐரோப்பிய நாடுகளில் கிலி பரவ ஆரம்பித்தது. குறிப்பாக, பெல்ஜியத்தின் அரசனுக்குப் பயம் சற்று அதிகமாக இருந்தது. 'மக்கள் விருப்பப்பட்டால், தான் முடி துறக்கவும் தயார். மாதாமாதம் தனக்கு ஒரு சம்பளம் மட்டும் கொடுத்தால் போதும்' என அவன் வெளிப்படையாக அறிக்கை விட, மக்கள் அவனது இந்த நூதன தந்திரத்தில் ஏமாந்தனர்.

மன்னனைப் பொருட்டாகக் கருதாமல் விட்டுவிட்டனர். இந்தத் தருணத்தில், மன்னன் தன் பாதுகாப்பை நன்கு பலப்படுத்திக்கொண்டான். அதுவரை மறைந்து கிடந்த புரட்சியாளர்களும் மன்னன் அடிபணிந்துவிட்டதாகக் கருதிப் புரட்சி கீதங்களைப் பாடியபடி வர, அதிரடியாகப் படைகளை அனுப்பி, அனைவரையும் கூண்டோடு கைது செய்து, சிறையில் தள்ளினான் மன்னன்.

பெல்ஜியத்தைவிட்டு வெளியேற மார்க்ஸ் முயற்சிக்கும்போது, வெளியே தபதபவென படை வீரர்கள் அணிவகுக்கும் சத்தம். மார்க்ஸ் சுற்றி வளைக்கப்பட்டார். அன்றிரவு, மார்க்ஸ் கைதானது குறித்து பெல்ஜியம் பொதுவுடைமைச் சங்கத் தலைவரிடம் விவரித்துவிட்டு, வீடு திரும்பிய ஜென்னியை, காவலர்கள் பலவந்தமாகக் கைது செய்து இழுத்துச் சென்றனர். தன்னைக் காணாமல் பரிதவிக்கப்போகும் பெண் குழந்தைகளை எண்ணித் துயருற்றார் ஜென்னி. இருண்ட சிறையில் தள்ளப்பட்ட ஜென்னி, இருளில் தன் மேல் ஏதோ படர்வதை உணர்ந்தார். பாம்போ என அச்சம்கொண்டார். பிறகே தெரிந்தது, அவை ஏற்கெனவே அங்கே சிறையில் அடைக்கப்பட்ட தேக விற்பனைப் பெண் கைதிகளின் உடல்கள் என்பது. நரகத்தின் கொடூரப் பாடலாகக் கழிந்தது அந்த இரவு.

மறுநாள், அடுத்த 24 மணி நேரத்துக்குள் தேசத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற கெடுவுடன் மார்க்ஸும் ஜென்னியும் விடுவிக்கப்பட்டுத் துரத்தப்பட்டனர். பாரீஸில் புரட்சியாளர்களின் ஆட்சி நடந்துகொண்டு இருந்ததால், அங்கே போக முடிவு செய்தார் மார்க்ஸ். ஆனால், பாரீஸ் அவர் நினைத்தது போல் இல்லை. அங்கே புரட்சி, சில அபத்தங்களையும் உருவாக்கி வைத்திருந்தது. அங்கே ஆர்வக்கோளாறுப் புரட்சியாளர்களே அதிகம் இருந்தனர். பிரான்ஸைப் போல, ஜெர்மனியிலும் புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என அசட்டுத்தனமாக முடிவெடுத்து, ஜெர்மனிக்குப் புறப்பட்டவர்களின் அரைவேக்காட்டுப் புரட்சியைக் கடுமையாகச் சாடினார் மார்க்ஸ்.

காரணம், ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு சுபாவம் உண்டு. மார்க்ஸ் அதனை நன்கு உணர்ந்திருந்தார். பிரான்ஸ் மக்கள், சுதந்திரத்தைக் கொண்டாடுபவர்கள். அதனால்தான் உலகின் முதல் புரட்சி அங்கு வெடித்தது. ஆனால், ஜெர்மனி அப்படி இல்லை. அவர்கள் தங்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளின் மூலமாக உலகுக்கு அளித்த நன்கொடைகள் எக்கச்சக்கம். அதேசமயம், அதிகார வெறி பிடித்த பூமி அது. அங்கே ஒவ்வொருவருமே தங்களை ஓர் அதிகாரியாக நினைத்துக்கொள்பவர்கள். எப்போதுமே அடுத்தவனை

அதிகாரம் செய்ய விரும்புபவன், தன் மேல் நிகழ்த்தப்படும் அதிகாரத்துக்கு அவ்வளவு சீக்கிரம் எதிர்ப்புக் காட்ட மாட்டான். எதிர்த்தால், எங்கே தன் பதவிக்கு வேட்டு விழுந்துவிடுமோ என்கிற பயம்தான் காரணம். இந்தப் பயம்தான், ஹிட்லர் எனும் கொடூரன் யூதர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவித்தபோது, அதற்கு உடந்தையாக ஜெர்மன் மக்களை மௌனமாக இருக்கவைத்தது. ஹிட்லர் மட்டும் பிரான்ஸில் தோன்றியிருந்தால், வரலாறு தலைகீழாக மாறியிருக்கும்.

எனவே, முதலில் மக்களின் மனநிலையில் மாற்றம் நிகழ வேண்டும். அவர்களின் உதவியுடனே புரட்சியை நிகழ்த்த வேண்டும் எனத் தெளிவாக எச்சரித்திருந்தார் மார்க்ஸ். வெற்றி மயக்கத்தில் இருந்தவர்களுக்கு அது காதில் விழவே இல்லை!

எல்லா மக்களும் என் மக்கள்! நானோர் உலக மகன்!'

'எல்லா நாடும் என் நாடே! எல்லா மக்களும் என் மக்கள்! நானோர் உலக மகன்!' தன் வாழ்வெனும் ரயிலை இயக்கும் எரிசக்தியாக, மார்க்ஸ் பயன்படுத்திய பொன்வாசகம் இது!

இதனால்தான் தன் சொந்த நாட்டின் அதிகாரப் பீடங்களுக்கு எதிராக எழுதத் துவங்கிய அவரது பேனா, முடிவில் உலக மக்களின் நன்மைக்காகவும் பாட்டாளி வர்க்கத்தின் விடியலுக்காகவுமான உன்னத வெளிச்சத்தை நோக்கிப் பயணித்தது!



ஒவ்வொரு தேசம் பற்றியும் மார்க்ஸ் அறிந்திருந்தார். அதனால்தான், 'ஜெர்மனிக்குள் இப்போது புரட்சி செய்ய வேண்டாம். இது தகுந்த நேரமல்ல!' என்று சகாக்களைத் தடுத் தார். அப்போது அவர்கள் மடமையின் மடியில் விழுந்துகிடந்ததால், மார்க்ஸின் சொற்கள் அவர்களின் செவிகளில் ஏறவில்லை.

1848, ஏப்ரல் 1ம் தேதி...


அலைகடல் வெள்ளமென, கோஷங்களை எழுப்பியபடி பிரான்ஸிலிருந்து ஜெர்மனிக்குள் நுழைந்தது புரட்சிப் படை! போன வேகத்திலேயே, மரண அடி கொடுத்துப் புரட்சியாளர்களைச் சிதறடித்தது ஜெர்மன் அரசு. மார்க்ஸின் தீர்க்கதரிசனம் அதன் பிறகே புரட்சியாளர்களுக்கு உறைத்தது. என்ன செய்வதெனப் புரியாமல், மார்க்ஸ் முன் கூடினர். தனித்தனியே, ஆங்காங்கே ஜெர்மனிக்குள் ரகசியமாக நுழைந்து, படிப்படியாக பேச்சிலும் எழுத் திலுமாக நெருப்பைக் கொளுத்திப்போட்டு, புரட்சியை விதைக்கலாம் என்பது

மார்க்ஸின் திட்டம். அனைவரும் அதனை ஏற்று, ரகசியமாக ஜெர்மனிக்குள் ஊடுருவினர்.

கொலோன், தொழிற்சாலைகள் மிகுந்த நகரம். மார்க்ஸ் தனக்கேற்ற புரட்சியின் விளைநிலமாக அதைத் தேர்ந்தெடுத்தார். அடுத்த சில நாட்களில், அவரது இதயக்கனியும் கொலோன் நகருக்குள் குழந்தைகளுடன் குடியேறியது. தந்தையின் குடும்பச் சொத்து மூலமாகக் கிடைத்த 7,000 டாலர் பணத்தைக் கொண்டு, அச்சகம் ஒன்றை நிறுவினார்.

1848, ஜூன் 1ம் தேதி... மீண்டும் உதயமானது ரைன்லாந்து கெஜட். ஒரே வருடம்தான்... கொலோன் நகரத் தொழிலாளர்களின் மத்தியில் பிதாமகனாக உருவெடுத்துவிட்டார் மார்க்ஸ். அபாயம் தங்களுக்கு அருகிலேயே இருப்பதை அப்போதுதான் உணர்ந்தது ஜெர்மன் அரசு. மீண்டும் மார்க்ஸைச் சுற்றி வளைத்து, நாடு கடத்தியது. வழக்கம் போல இந்த முறையும் மார்க்ஸ், ஜெர்மன் ராணுவத்தா ரால் பிரான்சுக்குள் கொண்டு வந்து விடப்பட, அதன் பிறகு ஒரு மாதம் கழித்து ஜென்னி தன் குழந்தைகளுடன், பல இழப்புகளையும் வேதனைகளையும் சுமந்தபடி கணவனின் இல்லம் தேடி, பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

மார்க்ஸ்





ஜென்னி

வாழ்க்கையில் சோதனைகள் வரும். ஆனால், சோதனைகளிலேயே வாழ்க்கை ஓடினால்..? மார்க்சுக்காவது இது விரும்பி வகுத்துக்கொண்ட பாதை. உலக மக்களுக்கான விடுதலை என்ற ஒரே சிந்தனை அவரது உள்ளுக்குள் கனன்றுகொண்டு இருந்ததால், அத்தனை சோதனைகளையும் மீறி, முடிவான வெளிச்சம் நோக்கி அவரால் ஓட முடிந்தது. ஆனால், ஜென்னி? கணவன் என்பதற்காக, எத்தனை தொல் லைகளைத்தான் ஒரு பெண்ணால் சகித்துக்கொள்ள முடியும்? ஆனால், ஜென்னியோ தன்னையே மார்க்ஸாகக் கருதி வாழ்ந்தார். அதனால்தான், வாழ்வில் எதிர்ப்படும் எத்தகைய சவாலையும் தூள் தூளாக்கும் வலிமை மிக்க பெண்ணாக அவரால் வீறுநடை போட முடிந்தது. மார்க்ஸின் வரலாற்றுப் பாதையில், என்றேனும் ஒரு அடி, ஒரே ஒரு அடி... சலிப்பின் காரண மாக ஜென்னி பின்வாங்கி யிருந்தால்கூட, உலக வரலாறே திசை மாறியிருக்கும். அந்த அளவுக்கு மார்க்ஸின் உயிராக, ஜென்னி பிணைக்கப்பட்டு இருந்தார்.

மார்க்ஸ் வந்திருக்கிறார் என்று கேள்வியுற்றதுமே, பிரான்ஸ் அரசாங்க நாற்காலிகள் நடுங்க ஆரம்பித்தன. மீண்டும் நாடு கடத்தும் படலங்கள்!

1849ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி... மார்க்ஸ் லண்டன் வந்தார். அதுதான் அவர் புகலிடம் தேடிச் சென்ற கடைசி இடம். செப்டம்பர் 15ம் தேதி, ஜென்னியும் குழந்தைகளும் லண்டன் லீ செஸ்டர் ஸ்கொயர் அருகே இருந்த, அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.


சூரியனே மறைய முடியாமல் திணறும் சாம்ராஜ்யத்தைக்கொண்ட அரச பீடமாம் இங்கிலாந்தின் தலைநகரம், லண்டன். உலகின் பணக்கார நாடு. அதன்பின், மார்க்சுக்கு எந்தத் தொல்லையும் இருந்திருக்காது என நீங்கள் நினைக்கலாம். உண்மைதான். மார்க்சுக்கு அதன்பின் பிரச்னைகள் வெளியிலிருந்து வரவில்லை; வீட்டுக்குள்ளேயே முளைத்தது.

மார்க்ஸ் அப்போது உலகத் தொழிலாளர்களின் தலைவனாக உருவாகிக்கொண்டு இருந்தார். லண்டன் பொதுவுடைமைச் சங்கக் கூட்டங்களில் அவரது இடி முழக்கப் பேருரை களைக் கேட்க, தொழிலாளர்கள் திரண்டனர். கூடவே, எதிர்ப்பும் ஒருபுறம் வலுத்திருந்தது.

அவர்களைப் பொறுத்தவரை, அரசாங் கத்திடமிருந்து உரிமைகளைப் பெறுவதற்காக மட்டுமே போராட்டம். ஆனால், மார்க்ஸ் அவர்களைக் கடந்து நெடுந்தூரம் பயணப்பட்டு விட்டிருந்தார். பாட்டாளி வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பது அவரது கனவாக இருந்தது. இது அவர்களுக்கு நம்ப முடியாத கற்பனையாகவும், அதீதப் பேராசையாகவும் தோன்றியது. இதனால் தொழிலாளர்கள் மத்தியிலேயே, மார்க்ஸின் மீது அவநம்பிக்கை உண்டானது.

இதனால், மார்க்ஸ் ஒருவித நிராகரிப்புக்கு ஆளாக்கப்பட்டார். தன் கருத்துக்களை எழுத்தாக மாற்றி அவர்களிடம் கொண்டுசெல்வதுதான், இதற்கு ஒரே தீர்வு என்பதை உணர்ந்து, அந்தப் பணிக்குள் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார். அப்படி அவர் தீவிரமாக தன்னை மூழ்க டித்துக்கொண்டு இருந்த சமயத்தில்தான், 'பசி' என்கிற அந்த இரண்டெழுத்து எதிரி அவரது வீட்டினுள் நுழைந்தது.

அப்போது மார்க்ஸ், ஜென்னி தம்பதிக்கு நான்கு குழந்தைகள். முதல் இரண்டு பெண் குழந்தைகளும், பசி என்றால் என்ன என்று தெரியும் வயதை எட்டியவர்கள். எட்கர், லிட்டில் பாக்ஸ் என்கிற அடுத்த இரு சிசுக்களும், பால் குடி மறக்காத பச்சிளம் ஆண் குழந்தைகள். ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு என்பதே பெரும் செலவு மிகுந்ததாக இருந்த காரணத்தால், குழந்தைகளுக்கும் மார்க்சுக்கும் இருப்பதைப் பரிமாறிவிட்டுப் பட்டினி கிடக்க ஆரம்பித்தாள் ஜென்னி. இதன் காரணமாக, அவள் மார்பில் பால் வற்றத் துவங்கியது. ஒரு கட்டத்தில், அதீத வறுமையின் காரணமாக சுருங்கிக்கிடந்த ஜென்னியின் மார்பில் ரத்தம் சுரக்கத் துவங்கியது. அன்று இரவு நெடுநேரம் அந்த வீட்டில், வழக்கமாகக் குழந்தைகள் அழும் சத்தத்துடன் ஜென்னியின் அழுகுரலும் சேர்ந்து ஒலித்தது.



ஆகஸ்ட் 1850. அடிக்கடி பணம் அனுப்பி உதவும் ஏங்கல்ஸிடமிருந்தும் தகவல் எதுவும் வராத நிலை. ஒரு நாள், வேகமாக வீட்டினுள் படியேறி வந்த வீட்டுக்காரப் பெண்மணி, வாடகை பாக்கி கேட்டுக் கூச்சல் போட ஆரம்பித்தாள். அன்றோடு அவள் விதித்திருந்த கெடு முடிந்திருந்தது. அவளுடன் வந்த அடியாட்கள் தடதடவென வீட்டினுள் நுழைந்தனர். பெட்டி, படுக்கைகளை எடுத்து வீதியில்

எறிந்தனர். இன்னும் இரண்டு நாள் தனக்கு அவகாசம் தரும்படி ஜென்னி, எஜமானியிடம் கெஞ்சிக் கதற, அந்தப் பெண்மணியின் கல் நெஞ்சிலிருந்து கடைசி வரை ஈரம் சுரக்கவே இல்லை.

வேறு வழியில்லை. புதிய இடம் பார்த்துச் செல்ல வேண்டியதுதான். மிகுந்த போராட்டத்துக்கிடையில் மார்க்ஸ், செஸ்டர் தெருவில் எண் 1, ஜெர்மன் ஓட்டல் எனும் இடத்தில் இரண்டு அறைகள் மட்டுமே கொண்ட ஒரு வீட்டைப் பேசி, மறு நாள் அங்கே குடியேற சம்மதம் பெற்றார். ஜென்னியும் குழந்தைகளும் அன்று இரவு லண்டன் தெருவில்,குளிரில் வெறும் தரையிலேயே படுத்தனர்.

மறுநாள், வண்டியில் பொருட்கள் ஏற்றப்படு வதற்குள் எங்கிருந்தோ ஓடி வந்த கூட்டம் வண்டியைச் சூழ்ந்துகொண்டது. மருத்துவர், பால்காரர், மளிகைக் கடைக்காரர் என கடன்காரர்களின் கூட்டம் அது. மார்க்ஸ் தர வேண்டிய பாக்கிக்குப் பதிலாக, ஆளாளுக்குக் கையில் கிடைத்த பொருள்களை எடுத்துக்கொண்டு நடையைக் கட்டினர். ஜென்னியின் இதயத்தில் ரத்தம் கசியச் செய்தது இந்தக் காட்சி! இதுகூடப் பரவாயில்லை... வறுமை என்கிற அரக்கன், அடுத்தடுத்து மார்க்ஸ் தம்பதியின் பிஞ்சுக் குழந்தைகள் மூவரைக் கொலைவெறியோடு தின்று தீர்த்ததுதான் எல்லாவற்றையும்விடப் பெருங்கொடுமை!

புதிய மறுமலர்ச்சி கீதங்கள் இசைக்கத் துவங்கும் என்று மார்க்ஸ் உறுதியாக நம்பினார்.


மார்க்சுக்குதன் னால் முடிந்த அத்தனை உதவிகளையும் அவ்வப்போது ஏங்கல்ஸ் செய்து வந்தார் என்றாலும் அவரே தன் தந்தையை அண்டி வாழ வேண்டிய நிலையில் இருந்ததால், முழுமையாக உதவ முடியவில்லை.

அமெரிக்காவிலிருந்து வெளி யான 'நியூயார்க் ட்ரிபியூன்' பத்திரிகைக்கு மார்க்ஸ்அவ்வப் போது எழுதியதில் கிடைத்த சொற்பப் பணத்தின் மூலமாகத் தான் ஓரளவு குடும்பம் ஓடியது. ஒருகட்டத்தில், அங்கிருந்தும் பண வரத்து நின்றுபோக, குடும்பம் மிகுந்த நெருக்கடிக்கு ஆளானது. வாடகை கொடுக்காததால்,ஏழைகள் அதிகம் வசிக்கும் இடநெருக்கடி மிகுந்த ஓர் ஒண்டுக்குடித்தனத்துக்கு மீண்டும் இடம்பெயர்ந்தனர். இந்த இக்கட்டான சூழலில்தான் அவர்களின் முதல் குழந்தை இறந்தது. இது குறித்து ஜென்னியே இவ்வாறு எழுதுகிறார்...

'....... அது 1850 ஆகஸ்ட்மாதம். அப்போது நான் என் ஐந்தாவது குழந்தையை வயிற்றில்சுமந்து கொண்டு இருந்தேன். பண முடை அதிகமாகிவிட்டது. எல்லா இடங்களிலும் கடன் வாங்கி யாகிவிட்டது. இனி கை நீட்டக்கூட ஆட்கள் இல்லை.

இந்தச் சமயத்தில், கைக்குழந்தையாக இருந்த என் செல்வன் லிட்டில் பாக்சுக்கு கடும் காய்ச்சல்.

மருந்து வாங்கக்கூட பணம் இல்லை. ஜுரத்திலிருந்த குழந்தையைத் தோளிலும் மற்றொரு செல்வனான எட்கரை கையிலும் பிடித்துக்கொண்டு ஹாலந்தில் இருந்த கார்லின் மாமாவைப் பார்க்கப் புறப்பட்டேன். அப்போது அவர்கார்லுக்குக் கொடுக்கவேண்டிய பணம்அதிகமாக இருந்தது. ஆனால், அந்தப் பெரிய மனிதருக்கு கார்லின் புரட்சி நடவடிக்கைகளின் மேல் கடும் கோபம்.


சென்ற இதழ் தொடர்ச்சி...

'மனித குலத்தின் நன்மைக்கான பாதையில் எத்தனை சுமைகள் வந்தாலும் அதனை நம் தோள்கள் தாங்கும்: ஏனென்றால், அது எல்லோருடைய நன்மைக்காகவும் செய்யப்படுகிற மகத்தான தியாகம்!'

வரலாற்றின் தீர்க்கதரிசிகளுக்கு எல்லா காலத்திலும் எதிரிகள் என்றால், ஆட்சியாளர்களும் அதிகாரவர்க்கத்தினருமே. மார்க்ஸுக்கும் ஜென்னிக்கும் அப்படியே என்றாலும் அவர்களைத் தடுமாறவைத்த எதிரி... மரணம். அதுவும் தங்களது மூன்று பிஞ்சுக் குழந்தைகளின் அடுத்தடுத்த மரணங்கள்.

எதிர்கொள்ளும் ஒவ்வொரு மரணத்தின்போதும் மார்க்ஸையே கவனித்துக்கொண்டு இருப்பார் ஜென்னி. எங்கே தான் கலங்கினால், அது தன் கணவனையும் நாளைய உலகின் விடியலுக்கான அவரது பயணத்தின் வேகத்தையும் தாமதப்படுத்தி விடுமோ எனும் பயம்தான் அதற்கும் காரணம்.

'மூலதனம்'... இதுதான் அந்த விடியல்!

மார்க்ஸின் மனம் அதன் பிரமாண்டமான சிருஷ்டியை நோக்கியே பயணித்துக்கொண்டு இருந்தது. அந்த ஆய்வுப் புத்தகத்தை மட்டும் எழுதி முடித்துவிட்டால் போதும், வருங்காலத் தொழிலாளர்களின் வேதனைகள் அனைத்துக்கும் அதுவே விடை எழுதிவிடும். உலகம் முழுக்கப் போலி அதிகார மையங்கள் அடித்து நொறுக்கப்பட்டு, பாட்டாளிகளின் வாழ்விலே

ஜுரத்தில் இருந்த குழந்தையிடம் சிறு பொட்டலம் ஒன்றைக் கொடுத்து, தன்னிடம் இவ்வளவுதான் உள்ளது என்பதைச் சொல்லாமல் சொல்லும்விதமாக என்னைப்பார்த்தார். நான் மலையளவு நம்பிகையுடன் அங்கு சென்றேன்.அவர் கடுகளவே கொடுத்தார். அந்தத் தோல்வியை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தொண்டைக்குழி அடைத்தது. அதற்கு மேல் அவர் முன் நிற்க, என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. நான் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தேன். நிமோனியா ஜுரத்தில் அவஸ்தைப்பட்ட லிட்டில் பாக்ஸ் இறந்துபோனான். வறுமைக்கு நான் பலி கொடுத்த முதல் குழந்தை அவன்.

என்னை வாட்டும் அவனது நினைவிலிருந்து விலகவே, நாங்கள் அதே பகுதியின் வேறு வீதிக்குக் குடி புகுந்தோம். மார்ச் 28, 1851ல் என் புதிய செல்வி பிரான்சிஸ்கா பிறந்தாள்.....'



தன் குடும்ப நண்பரான வெய்டெய்மர் என்பவரிடம் பொருளுதவி கேட்டு, அவர் எழுதிய இன்னொரு கடிதமொன்று அவர்களது நிலையை மேலும் தெளிவுபடுத்துகிறது.

'அன்பார்ந்த நண்பரே, இது போன்ற அற்ப சங்கடங்களில் எல்லாம் நான் ஒருபோதும் தளர்வடைவதில்லை. எனக்கு என் கணவர் அருகில் இருக்கிறார். இப்படி ஒரு மனிதரைக் கணவராகப் பெற்றமைக்காக நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எனக்கிருக்கும் கவலை எல்லாம் ஒன்றே ஒன்றுதான். இந்த பாழாய்ப் போன வறுமை, அந்த அற்புதமான இதயத்தை எவ்வளவு வேதனைக்குள்ளாக்குகிறதோ எனும் ஒரே சிந்தனைதான் என்னை வாட்டி வதைக்கிறது. அவர் எத்தனையோ பேருக்குக் கேட்காமலே உதவிகள் செய்திருக்கிறார். ஆனால், இப்போது மற்றவர்கள் எங்களுக்குச் செய்ய வேண்டிய முறை. ஆனால், உதவி செய்ய ஒருவரும் இல்லை. அவர் எதற்காகவும் எவரிடமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைநீட்டியதில்லை. அதை என்னாலும் தாங்கிக்கொள்ள முடியாது. அவர் ஒன்றும் சும்மா இல்லை. அவர் இப்போது எழுதும் ஒவ்வொரு எழுத்தும் லட்சம் பெறும். அதற்கு விலையே இல்லை... எங்களுக்கு எதிர்காலத்தின் மேல் அதிக நம்பிக்கை இருக்கிறது....'

இந்தச் சூழலில் அவர்களது புதிய வரவான பிரான்சிஸ்கா, மார்புச் சளியினால் அவஸ்தைப்பட்டாள். பிறந்த சில நாட்களிலேயே அந்தக் குழந்தையும் இறந்துபோனது. அதனை அடக்கம் செய்யக்கூட போதிய பணவசதி இல்லாத காரணத்தால், இரவு முழுக்க அந்தக் குழந்தையை வீட்டின் மற்றொரு அறையிலேயே கிடத்திவைத்திருந்தனர். ஒரு நண்பர் கடன் கொடுத்த பிறகே, ஜென்னியால் தன் குழந்தைக்கான சவப்பெட்டியை வாங்க முடிந்தது. இது குறித்து ஜென்னி தன் சரிதத்தில் இப்படியாகக் குறிப்பிடுகிறார்... 'பிறக்கும்போது அந்தக் குழந்தைக்கு தொட்டில் இல்லை, இறக்கும்போது அதற்கு சவப்பெட்டி வாங்கக்கூட கஷ்டமாகிப்போனது....'



இப்படியெல்லாம் வறுமை எனும் கொடிய அரக்கனுடன் 1849 முதல் 1855 வரை மார்க்ஸ் நிகழ்த்திய கொடிய போரின் காரணமாக, தொடர்ந்து தனது மூன்று குழந்தைகளை மார்க்சும் ஜென்னியும் பலி கொடுத்தனர்.

கடைசியாக எட்கர் இறந்ததுதான் மார்க்ஸின் மனவலியை அதிகப்படுத்திவிட்டது. ஏங்கல்சுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தில்... 'மகான்கள்இயற் கையையும் உலகத்தின் இதர நடவடிக்கைகளை யும் கூர்ந்து கவனிப்பதால், தங்களுக்கான உற்சாகத்தை அவர்கள் அதிலிருந்தேபெறுகிறார்கள். இதனாலேயே அன்றாட வாழ்க்கையின் சாதாரணப் பிரச்னைகள் அவர்களை ஒருபோதும் தீண்டுவதில்லை என பேக்கன் எனும் அறிஞன் கூறுகிறான். ஆனால், நான் அப்படிப்பட்ட அறிஞன் இல்லை... ஒரு சாதாரண மனிதன்தான். என் குழந்தை எட்கரின் மரணம் என்னை அதிகம் பாதித்துவிட்டது. என்னால் அவனது மரணத்தை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை...'

அதற்கடுத்த சில வருடங்களில் ஜென்னியின் தாயாரிடமிருந்து கிடைத்த சொற்பப் பணம் ஓரளவு தொடர் கஷ்டங்களிலிருந்து அவர்களை மீட்டெடுத்தது. அதன் பிறகு ஏங்கல்ஸின் தந்தையார் இறந்த பின், முழுப் பொறுப்பும் ஏங்கல்ஸ் வசம் வர, மார்க்ஸை பொருளாதாரப் பிரச்னைகள் அண்டாதவாறு அவர் பார்த்துக்கொண்டார்.

என்ன வேதனை என்றால், தன் குடும்பம் பொருளாதாரரீதியாகப் பெரும் துயருற்ற இந்த காலகட்டத்தில்தான், உலகத்தின் பொருளாதாரம் பற்றி தொடர்ந்து பல அரிய கட்டுரைகளை எழுதிவந்தார் மார்க்ஸ். இந்த ஆய்வுகளுக்காக மார்க்ஸ் பகல் முழுதும் லண்டன் மியூஸிய நூலகத்தில் கிடப்பார்.

நூலகம் திறக்கும்போது செல்லும் முதல் ஆளாகவும் நூலகம் அடைக்கும் போது வெளிவரும் கடைசிஆளாக வும் மார்க்ஸ் இருந்தார். வீட்டுக்கு வந்ததும் தனக்கென ஒதுக்கிக்கொண்ட பிரத்யேகமான அறையில் கதவைச் சாத்திக்கொண்டு அடைந்துகொள்வார். அவரைச் சுற்றி எப்போதும் புத்தகங்கள் இறைந்து கிடக்கும். யாரேனும் அதில் தெரியாமல் கைவைத்துவிட்டால், காட்டுச் சிங்கமாக உறுமுவார் மார்க்ஸ். சில சமயங்களில் தொடர்ந்து இரவு முழுக்க கண் விழித்துப் படிக்கும் மார்க்ஸ், விடிவதுகூடத் தெரியாமல் காலை எட்டு மணி வரை எழுதுவதும் படிப்பதுமாக இருக்குமளவு தீவிரமாக இருப்பார்.

மார்க்ஸ் சற்று ஓய்வாக இருக்கும் சமயங்களில் குழந்தைகளுடன் விளயாடுவார். அவர்களோடுநடை பயில்வார். ஷேக்ஸ்பியரின் கதைக ளைக் கூறுவார். மார்க்ஸின் வீட்டில் நண்பர்களின் கூட்டம் எப்போதும் மிகுந்திருக்கும். ஜென்னி கூடுமானவரை அவர்களுக்கு ஏதேனும் அருந்தக் கொடுத்து, உபசரிப்பார்.

மார்க்ஸின் மகள்களான ஜென்னியும் லாராவும் படிப்பில்முதல்வர்களாக இருந்தனர். வீட்டில் அனைவரும் மார்க்ஸை மூர் என்றே அழைப்பார்கள். 1856ல் ஜென்னி தனது தாயார் இறப்பு காரணமாக, ஜெர்மனிக்குச் செல்ல நேர்ந்தபோது, மார்க்ஸால் அந்தச் சிறிய பிரிவைக்கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்போது அவர் ஜென்னிக்கு எழுதிய கடிதத்தில்... 'உன் பிரிவு எனக்குள் மிகுந்த மனக்கிளர்ச்சியை உருவாக்குகிறது. எனது சக்திகள் அனைத்தும் அதில் கரைந்துபோவதைக் கண்கூடாகப் பார்க்கிறேன். ஒரே முறை மீண்டும் உன்னை என் இதயத்தோடு அணைத்துக்கொண்டால் போதும், என் இதயம் அமைதியாகிவிடும். அதன் பிறகு, எனக்கு இந்த உலகில் எதுவும் வேண்டியிருக்காது...' எனத் தன் பிரிவின் வலியை விவரிக்கிறார்.

1859ம் ஆண்டில் மார்க்ஸ் எழுதிய பொருளாதாரக் கட்டுரைகள், நூலாக வெளி யானது. இதற்கு ஏங்கல்ஸ் முன்னுரை எழுதியிருந்தார். நூல் வெளியானதிலிருந்து மார்க்ஸின் புகழ் உலகமெங்கும் பரவ ஆரம்பித்தது. சிந்தனையாளர்கள் மத்தியிலே மார்க்ஸ் மீண்டும் நட்சத்திரமாக ஜொலித்தார்.

1867 செப்டம்பர் 14, உலகத் தொழிலாளர்களின் வாழ்வில் நிரந்தர விடிவெள்ளி

முழுமையாக உதயமான நாள். மார்க்ஸ் எனும் உழைப்பு இயந்திரத்தின் 15 வருட கால வியர்வைத் துளிகள், எழுத்துருக்களாகக் காகிதங்களில் பிரசுரமாகி 'மூலதனம்' எனும் முழுப் புத்தகமாக அன்றுதான் வெளியாகியது.

இது குறித்து மார்க்ஸ், ஏங்கல்சுக்கு எழுதிய கடிதத்தில், 'கடைசியில் நம் நீண்ட நாள் லட்சியமான மூலதனத்தின் முதல் பாகம் புத்தகமாகிவிட்டது. இதற்கு நீ ஒருவனே காரணம். என் நன்றியை ஏற்றுக்கொள். எனக்காக நீ தியாகம் செய்திராவிட்டால், இந்த நூலை என்னால் உருவாக்கியிருக்கவே முடியாது. உன்னை பெருமிதத்துடன் கட்டித் தழுவுகிறேன். என் அரிய நண்பனே, உன்னை வாழ்த்துகிறேன்...' எனக் குறிப்பிட்டிருந்தார்.


ஏறக்குறைய இதே காலகட்டத்தில்தான் மனிதகுலத்தின் மகத்தான மற்றொரு புத்தகமும் வெளியானது. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி குறித்த அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் சார்லஸ் டார்வினுக்கு மார்க்ஸ் தனது மூலதனத்தை காணிக்கையாகச் சமர்ப்பிக்க விரும்பினார். அதற்காக அனுமதி கேட்டும் கடிதம் எழுதினார். ஆனால், டார்வின் அதனை மறுத்து அவசரமாக மார்க்சுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதில் அவர் குறிப்பிட்ட காரணம் மார்க்ஸை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியது!

## காலங்கள் தோறும் அவரது பெயர் நிலைத்து நிற்கும் **ஏங்கல்ஸ்**

**உ**யிரினங்களின் பரிணாம வளர்ச்சி குறித்து டார்வின் எழுதிய புத்தகம், மத நம்பிக்கையாளர்களுக்கு மரண அடி கொடுத்தது. அதனாலேயே, மார்க்சுக்கு டார்வின் மீது மரியாதை வந்தது. தனது மூலதனம் புத்தகத்தை டார்வினுக்குச் சமர்ப்பணம் செய்ய விரும்பி, அனுமதி கேட்டுக் கடிதம் எழுதிக் கேட்க, மறுத்துவிட்டார் டார்வின். தற்போதைக்கு மத நம்பிக்கைக்கு எதிரான காரியங்களில் ஈடுபடப்போவதில்லை எனத் தன் குடும்பத்தாரிடம் வாக்குறுதி கொடுத்துள்ளதால் எந்த வகையிலும் தன் பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று பதில் கடிதம் எழுதினார் டார்வின். அவரின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில், இது குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடாமல் மௌனம் காத்த மார்க்ஸ், தனது தோழரும் சோஷலிஸ இயக்கத்தின் தியாகியுமான வில்லியம் உல்ப் என்பவருக்குத் தனது 'மூலதனம்' நூலைச் சமர்ப்பணம் செய்தார்.

வெளியான நாள் முதலே, 'மூலதனம்' உலகமெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதுவரை மார்க்ஸைப் புரிந்துகொள்ளாமல் எதிர்த்து வந்த பலரும் புத்தகத்தின் வாயிலாகத் தெளிவடைந்தனர். அவரது பொருளாதாரச் சிந்தனைகளும் சமூகக் கட்டமைவு குறித்த பார்வையும் அறிவுலகின் புதிய வாசல்களைத் திறந்துவைத்தன.




இதனைத் தொடர்ந்து, பாரீஸில் 1871 மார்ச் 18ல் மகத்தான தொழிலாளர் புரட்சி வெடித்தது. தொழிலாளர்கள், வீதியில் ஆயுதங்களுடன் இறங்கினர். அப்போது பிரான்ஸை ஆண்டுகொண்டு இருந்த திபேர்ஸ் அரசு வீழ்த்தப்பட்டது. திபேர்ஸ் விரட்டியடிக்கப்பட்டான். மார்ச் 28ல், உலகின் முதல் பாட்டாளி அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. பாரீஸ் நகரின் ஒவ்வொரு வட்டத்தில் இருந்தும் ஒரு கவுன்சிலர், வாக்குரிமை மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டார். இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட ஜனநாயக அரசு, 'பாரீஸ் கொம்யூன்' என்று அழைக்கப்பட்டது. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் திரும்ப அழைக்கவுமான அதிகாரம், மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், இது நிலைக்கவில்லை. அடுத்த சில மாதங்களிலேயே குடியரசு கவிழ்ந்து, மீண்டும் முடியரசு ஆட்சிக்கு வந்தது. இந்தத் தோல்விக்கு மார்க்சும் அவரது தீவிரவாதக் கொள்கைகளும்தான் காரணம் எனச் சிலர் குற்றம் சாட்டினர். இதனால் உலக கம்யூனிஸ்ட் சங்கம் இரண்டாக உடைந்தது.இந்தத் தோல்வியுடன் மார்க்ஸின் உடல் நலமும் மோச மான கட்டத்தை அடைய, மார்க்ஸின் இறுதி நாட்களின் பயணம் துவங்கியது.

இக்கால கட்டங்களில், மனைவியின் இறப்பையட்டி ஏங்கல்ஸ் தனது இருப்பிடமான மான்செஸ்டரிலிருந்து முழுவதுமாக விலகி, மார்க்ஸின் வீட்டருகே மாற்றிக்கொண்டார். மார்க்ஸின் கடைசி பத்தாண்டுகளில், ஏறக்குறைய இருவரும் தினசரி சந்தித்துக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.




மூலதனத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்களுக்கான கட்டுரைகளைத் தொகுப்பதில் இருவரும் தீவிரமாக தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர். இன்றளவும் உலகின் தலைசிறந்த புத்தகங்களில் ஒன்றாக 'மூலதனம்' கருதப்படுகிறது.

அதன் சாரத்தைச் சுருக்கமாகச்

சொல்வதாக இருந்தால், இப்படிச் சொல்லலாம். உதாரணமாக, நமக்கு ஒரு பென்சில் தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதை நாமே சுயமாக உற்பத்தி செய்ய நீண்ட நேரமும் கடும் உழைப்பும் தேவைப்படும். ஆனால், இந்தத் தொல்லையே இல்லாமல், ஒரு விலை கொடுத்து அந்தப் பென்சிலை கடையிலிருந்து நாம் வாங்கிக்கொள்கிறோம். உண்மையில் நாம் பென்சிலை வாங்கவில்லை; அந்த பென்சில் தயாரிக்கத் தேவைப்படும் நம் உழைப்புக்குப் பதிலாக இன்னொருவருடைய உழைப்புக்கு ஒரு விலை கொடுக்கிறோம். அவ்வளவுதான். ஆனால், நாம் கொடுக்கும் அந்த விலை அந்தத் தொழிலாளிக்குச் சென்று சேர்கிறதா என்றால், இல்லை. பென்சில் தயாரிக்க மூலதனம் போட்ட காரணத்தால், பெரும் லாபத்தை அந்த முதலாளியும் பெரிய உழைப்பு இல்லாமல் அதை வாங்கி விற்கும் வியாபாரிகளுமே அதன் பலனை அனுபவிக்கின்றனர். இது குறித்து எந்த பிரக்ஞையும் இல்லாமல் அந்தத் தொழிலாளி, அற்பப் பணம் கொடுத்துத் தன் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் முதலாளியைக் கடவுளாக நினைத்து வணங்குகிறான். அதோடு நில்லாமல், குறிப்பிட்ட பென்சிலை பலரும் உற்பத்தி செய்து வியாபாரத்தில் போட்டி ஏற்படுகிறபோது, அதைச் சரிக்கட்ட, பென்சிலின் விலையைக் குறைக்கிறான் முதலாளி. அதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட, தொழிலாளியின் தோளில் அதிகப்படியான உழைப்பைச் சுமத்தி, அவர்களை முழுவதுமாக நசுக்க ஆரம்பிக்கிறான். இதைத்தான் மார்க்ஸ் தனது மூலதனம் நூலில் தெளிவுபடுத்தி, தொழிலாளர் களின் வாழ்வில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தார். இதற்காக அவர் மேற்கொண்ட உழைப்பு, வர்ணிப்புக்கு அப்பாற்பட்டது. கிட்டத்தட்ட 15 வருடக் கடும் உழைப்பின் வெளிப்பாடு, நூலின் ஒவ்வொரு வார்த்தையிலும் தோய்ந்திருந்தது.

பொதுவாகவே, எதையும் செறிவுட னும் ஆற்றலுடனும் படைப்பதில் மார்க்ஸிடம் ஒரு முரட்டுத்தனமான பிடிவாதம் இருந்தது. சிறிய துண்டுஅறிக்கையே ஆனாலும், பலமுறை வாசித்து தனக்குத் திருப்தி ஏற்படும் வரை, மீண்டும் மீண்டும் அதைத் திருத்தி, இறுதி வடிவத்துக்குக் கொண்டு வருவார். யூகத்தின் பேரில் சொல்லப்படும் எந்தக் கருத்தையும் அவர் பொருட்படுத்தியது இல்லை. சிறு சந்தேகம் என்றாலும் உடனே பிரிட்டிஷ் மியூஸியம் சென்று தகவலை உறுதிப்படுத்திக்கொண்ட பிறகே, களத்தில் இறங்குவார்.

வரலாறு, பொருளாதாரம், தத்துவம் என அறிவுபூர்வமான பல துறைகளில் மார்க்ஸ் தீவிரமாக இயங்கிவந்தாலும், நாவல்களை வாசிப்பதில் அலாதியான ஈடுபாடு இருந்தது.

சார்லஸ் லீவர், பால் டி காக், அலெக்சாண்டர் டூமாஸ், பீல்டிங்ஸ் ஆகியோரது படைப்புகளையும், வால்டர் ஸ்காட்டையும் மார்க்ஸ் பெரு விருப்பத்துடன் வாசித்தார். ஸ்காட்டின் மிகச் சிறந்த படைப்பாக 'ஓல்டு மொராலிட்டி'யை மார்க்ஸ் குறிப்பிடுவார். 'டான் க்விக்ஸாட்'டை எழுதிய செர்வாண்டிஸ் மற்றும் பால்சாக் ஆகியோரைத் தலைசிறந்த



எழுத்தாளர்களாக மார்க்ஸ் மனதில் இருத்தியிருந்தார்.

பலதரப்பட்ட மொழிகளைக் கற்கும் ஆவல் மார்க்ஸிடம் இருந்தது. 'வாழ்க்கை எனும் போர்க்களத்தில், மொழி ஒரு மிகச் சிறந்த ஆயுதம்' என அடிக்கடி கூறுவார். கிரேக்கம், லத்தீன், ஸ்பானிஷ், ஜெர்மன், பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில், பேச்சிலும் எழுத்திலும் மார்க்ஸிடம் தன்னிகரற்ற தேர்ச்சி இருந்தது. அதோடு நில்லாமல் தன் 50வது வயதில், ரஷ்ய மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார் மார்க்ஸ். புஷ்கின், துர்கனேவ், லெர்மன்டோவ், கோகல் ஷெரிடின் போன்ற படைப்பாளிகளிடம் தன் மனதைப் பறிகொடுக்கும் அளவுக்கு ரஷ்ய இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.


படைப்பிலக்கியங்களைப் போலவே மார்க்ஸ் தன்னை மறந்து ஈடுபட்ட மற்றொரு துறை, கணிதம். எப்போ தெல்லாம் மனச்சோர்வு அவரை ஆட்கொள்கிறதோ, அப்போதெல்லாம் அல்ஜீப்ரா, கால்குலஸ் போன்ற கணக்கு வகைகளைக் கையில் எடுத்துக் கொண்டு, அதன் சமன்பாடுகளைத் தீர்ப்பதில் தீவிரமாக தன்னை மூழ் கடித்துக்கொள்வார். இறுதிக் காலங் களில் ஜென்னி நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த காலகட்டங்களில் தன் மனதின் நிம்மதியற்ற தன்மை களிலிருந்து தப்பிக்க, இந்தக் கணித சமன்பாடுகளையே பெரிதும் நாடினார் மார்க்ஸ்.



ஆயிரக்கணக்கான புத்தகங்களை மார்க்ஸ் தனது நூலகத்தில் சேகரித்து வைத்திருந்தார். தனது தீவிரமான வாசிப்பினூடே பால் கலக்காத கறுப் புக் காபி குடிப்பதையும் அடிக்கடி சிகரெட் புகைப்பதையும் மார்க்ஸ் பழக்கமாகக்கொண்டு இருந்தார். கடும் உழைப்பின் மீதான அவரது தீராத காதல், பல நேரங்களில் அவர் முன் வைக்கப்பட்டு இருக்கும் உணவுத் தட்டைக்கூட மறக்கச் செய்துவிடும். பெரும்பாலும் காரமான உணவுவகை களையே விரும்பி உட்கொள்வார் மார்க்ஸ். அவரது அன்றாட பழக்க வழக்கங்களில் மிக முக்கியமானது மாலை நேர நடைப் பயிற்சி. ஏங்கல்ஸ் போன்ற நண்பர்களுடன் மாலை நேரங்களில் தீவிரமாகப் பேசியபடி நடை பயில்வது, அவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. மார்க்சுக்கு மிகவும் பிடித்தமான மற்றொரு பொழுதுபோக்கு, செஸ்.

மார்க்ஸோடு வெளியே கிளம்புவது என்றாலே, ஏதேனும் பிரச்னையில் சிக்குவது உறுதி என்பது அவரது நண்பர்கள் நன்கு அறிந்த ஒன்று. நண்பர் வில்லியம் லிப்னெக்ட்டுடன் ஒரு முறை பேருந்தில் பயணித்துக்கொண்டு இருந்தார் மார்க்ஸ். வழியில், சாலை ஓரம் ஒருவன் ஒரு பெண்ணைக் கண்மூடித்தனமாக அடித்துக்கொண்டு இருந்தான். பேருந்திலிருந்து மார்க்ஸ் சட்டெனக் குதிக்க, நண்பரும் கீழே குதித்து மார்க்ஸைப் பின்தொடர்ந்து ஓடினார். அது, குடும்பச் சண்டை. மார்க்ஸ் ஓடிச் சென்று கணவனை அடிக்கப் போக, சட்டென நிலைமை தலைகீழாக மாறிப்போனது. அதுவரை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த கூட்டம், இப்போது மார்க்ஸைச் சுற்றி வளைக்க ஆரம்பித்தது.

அதுவரை கணவனிடம் அடி வாங்கிக்கொண்டு இருந்த பெண்ணும் நம்மூர் பாணியில், சடாரென மார்க்சுக்கு எதிராகத் திரும்பி, "இது எங்கள் குடும்ப விவகாரம். இதில் தலையிட நீ யார்?" என்றாள். அதன்பின், கூட்டத்தைச் சமாளித்து மார்க்ஸை வீட்டுக்கு அழைத்து வருவதற்குள் நண்பருக்குப் பெரும்பாடாகிப் போனது.



அது போல, மார்க்சுக்குப் பிடிக்காத மற்றொரு விஷயம் பிச்சையிடுவது. 'பசியோடு இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட, மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பது எவ்வளவோ மேலானது' எனும் அவரது கூற்றுக்கு ஏற்ப, தன் முன் யார் கை நீட்டினாலும், அவர்களிடம் தாட்சண்யமில்லாமல் கடுமையை வெளிப்படுத்தி விடுவார். உழைத்துப் பிழைப்பதற்கான சாத்தியங்களை எடுத்துக் கூறுவார். அதேசமயம் பிச்சை எடுப்பவர்களின் கையில் குழந்தை இருந்தால், அமைதியாகக் கடந்து சென்றுவிடுவார்.

மார்க்ஸின் வீட்டில் நெடுங்காலமாகப் பணிப் பெண்ணாக இருந்தவர் லென்சன். வீட்டில் மார்க்ஸ், கடுங் கோபத்தில் இருக்கும் தருணங்களில், அவரது அறைக்குள் செல்லும் தைரியம் லென்சனுக்கு மட்டுமே உண்டு. அவரது சொல்லுக்கு மட்டும் மார்க்ஸ் மந்திரத்தில் கட்டுண்டது போல அடங்கிப் போவார்.

மார்க்சும் ஏங்கல்சும் தீவிரமாகப் பேசிக்கொண்டு இருக்கும் தருணங்களில், அறைக்குள் சென்று விட்டு வெளியேறும் லென்சன், தனக்குத்தானே யாரையோ திட்டிக்கொண்டு இருப்பாராம். அது பெரும்பாலும் மார்க்சுக்குத் தொல்லை தரும் எதிரிகளைப் பற்றியதாக இருக்கும். லென்சனின் கோபத்தைப் பார்த்து மார்க்ஸின் பெண்களான லாரா மற்றும் ஜென்னி சிரித்தால் போதும்... அவர்களுக்கும் பாட்டு விழும்.

பிறந்த ஏழு குழந்தைகளில், மார்க்சுக்கு மிஞ்சியது மூன்று பெண் குழந்தைகள் மட்டுமே. மூவரிடமும் மார்க்ஸ் எல்லையற்ற அன்பைச் செலுத்தினார். கடைசி பெண்ணான எலியோனார் வயதில் சிறியவளாக இருந்தாலும், அறிவில் பிரகாசமானவளாக இருந்தாள். பிற்காலத்தில் தன் தாய் தந்தையரைக் குறித்த தன் நினைவுகளை எழுத்தில் அவர் பதியவைத்தபோது, வாசித்தவர்களின் இதயங்கள் கனத்து, கண்கள் நீரால் நனைந்தன.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில், இந்தப் பூமியில் வாழ்ந்த தலைசிறந்த மனிதராக, வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் கருதப்படும் மார்க்ஸின் இறுதிக் காலம், ஒப்பற்ற காதல் கதையின் இறுதிக் காட்சியைப் போன்றது. ஜென்னியைப் புற்றுநோய் தாக்கியது. தான் இறந்தால், தன் அன்பின் எதிர்காலம் செயலற்றதாகிவிடுமே என்று கலங்கினார் ஜென்னி. 1881ம் ஆண்டு, இரக்கமற்ற டிசம்பர் மாதத்தில், உலகத்துக்குக் காதலையும், பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கற்றுக்கொடுத்த ஜென்னி எனும் மலர் பூமியில் உதிர்ந்தது. மார்க்ஸின் நிலை எத்தகையதாக இருந்திருக்கும் எனச் சொல்வதற்கு இல்லை.

பான் பல்கலைக்கழகத்தின் குடிகார மாணவனாக வீடு திரும்பிய நாட்களில், பருவ

வயதில் ஜென்னியைச் சந்தித்த நினைவுகள், அவர் மனதில் மங்கலான தோற்றத்தில் ஓடின. தன்னைப் பின்பற்றி தன்னோடு உறுதியாக வாழ்நாள் முழுவதும் ஊர் ஊராக, நாடு நாடாக அலைந்து, பசியிலும் பட்டினியிலும் தன்னோடு கருத்தொருமித்திருந்த நாட்களை நினைவு கூர்ந்தார். ஜென்னி இல்லை என்கிற நினைவே, தாங்க முடியாத பாரத்தை அவர் இதயத்தில் ஏற்றிவைத்தது.

அடுத்த ஒரு வருடத்துக்குள், மற்றொரு பேரிடி. பெயர் மட்டுமின்றி, உருவத்திலும் தாயின் சாயலிலேயே இருந்த மூத்த மகளான ஜென்னியின் மரணம், மார்க்ஸை நிலைகுலைய வைத்தது. ஒரு மனிதனால் எத்தனை துயரங்களைத் தாங்க முடியும். மனைவி இறந்தபோது, மார்க்ஸ் முதன்முறையாக இறந்தார். அருமை மகள் ஜென்னி இறந்தபோது இரண்டாவதாக இறந்தார். மூன்றாவ தாக அவரது மரணத்தை எதிர் நோக்கி, அவரது வெறுமையான வீடு காத்திருந்தது.

1883, மார்ச் 14... பிற்பகல் 2.30 மணிக்கு தனது படுக்கை அறையிலிருந்து படிக்கும் அறைக்கு நடந்து சென்று, அங்கு தான் வழக்கமாக அமரும் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் மார்க்ஸ். அவரது கைகள் தானாகச் சட்டைப் பையைத் துழாவின. அதில் அவரது தந்தை, மனைவி ஜென்னி, மகள் ஜென்னியின் படங்கள் இருந்தன. கடைசி வார்த்தைகள் என எதுவும் சொல்லாமல், தனது 66வது வயதில், மக்கள் நலன் குறித்தே தன் வாழ்நாளெல்லாம் யோசித்துக் கொண்டு இருந்த அந்தச் சிந்தனைச் சிற்பி பூரண அமைதிக்குள் ஆழ்ந்தார்.

லண்டன் ஹை கேட் மைதானத்தில் மனைவியும், மகளும் அடக்கமாகி இருந்த அதே இடத்தில் மார்க்ஸின் உடலும் அடக்கம் செய்யப்பட்டது. அப்போது ஏங்கல்ஸ் நிகழ்த்திய சரித்திரப் புகழ்பெற்ற உரையில் இவ்வாறு கூறினார்...

'அவர் யூதனாகப் பிறந்தார், கிறிஸ்துவனாக வாழ்ந்தார், மனிதனாக இறந்தார். காலங்கள் தோறும் அவரது பெயர் நிலைத்து நிற்கும்!'